# 9. பன்னாட்டு வர்த்தகமும் சென்மதி நிலுவையும் சுற்றுலாவும்

## 9.1. பொதுநோக்கு

இலங்கையின் சென்மதி நிலுவையில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்ட திரண்ட மிகைகளுக்குப் பின்னர் 1995 இல் சிஎஉ 620 இலட்சம் கொண்ட திரண்ட பற்றாக்குறையைப் பதிவுசெய்தமைக்கு தனியார் மூலதன உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். எனினும் நேர்கணியப் பக்கத்தில் ஏற்றுமதிகள் சிறந்த செயலாற்றத்தைக் கொண்டிருந்ததோடு வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. வர்த்தகப் பற்றாக்குறை 1994 இன் சிஎஉ 10,890 இலட்சத்திலிருந்து (மொ.உ.உ. இல் 13.3 சதவீதம்) 1995 இல் சிஎஉ 9,210 இலட்சத்திற்கு (மொ.உ.உ. இல் 10.8 சதவீதம்) குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தமைக்கு முன்னேற்றமடைந்த ஏற்றுமதி செயலாற்றமும் இறக்குமதியின் வளர்ச்சியில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சியுமே காரணமாகும். வர்த்தகக் கணக்கில் ஏற்பட்ட இத்தகைய மேம்பாட்டுடன், பணிகள் கணக்கில் காணப்பட்ட சிறிய மிகை, தேறிய தனியார் மாற்றல் பெறுகைகளில் காணப்பட்ட உயர்வு என்பனவற்றின் காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1994 இன் சிஎஉ 5,260 இலட்சத்திலிருந்து (மொ.உ.உ. இல் 6.5 சதவீதம்) 1995 இல் சிஎஉ 3,580 இலட்சத்துக்கு (மொ.உ.உ. இல் 4.2 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது.

பெரும்பாலான வேளாண்மை உற்பத்திப் பொருட்களினதும் மற்றும் சில கைத்தொழில் உற்பத்திப் பொருட்களினதும் விலைகள் மேம்பாடடைந்தமை, செலாவணி வீதத்தில் ஏற்பட்ட பெறுமானத்தேய்வு, முக்கியமான பெருந்தோட்டப் பயிர்களுக்கு சாதகமான வானிலை நிலைமைகள் இருந்தமை என்பனவற்றின் காரணமாக ஏற்றுமதித்துறை நன்மையடைந்ததுடன் முன்னைய ஆண்டின் வளர்ச்சி வீதமான 9 சதவீதத்துடன் ஒப்பிடும்போது சிஎஉ நியதிகளில் 12 சதவீதமான வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. அதேவேளை இறக்குமதி சார்ந்த வெளிநாட்டு தனியார் முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, நீண்டகால நுகர்வுப் பொருள்களின் இறக்குமதிகளில் காணப்பட்ட வீழ்ச்சி மற்றும் செலாவணி வீதம் தேய்வடைந்தமை என்பனவற்றின் காரணமாக இறக்குமதி வளர்ச்சி வீதம் 1994 இன் 16 சதவீதத்திலிருந்து 1995 இல் 3 சதவீதத்திற்கு மிகக் கூடியதாக வீழ்ச்சியடைந்தது. வர்த்தக மாற்று விகிதம் 1.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய வேளாண்மை ஏற்றுமதி உற்பத்திகளுக்கு சாதகமான விலைகள் கிடைத்தபோதும் கோதுமை, சீனி, பால் உற்பத்திப் பொருட்கள், வளமாக்கிகள் போன்ற முக்கியமான இறக்குமதிப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பே முதன்மையான காரணமாகும்.

அலுவல்சார் மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சலில் 19 சதவீத அதிகரிப்பு வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயுக் கம்பனியின் முக்கிய பங்குடமையினை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட சிஎஉ 250 இலட்சம் பெறுகை என்பனவற்றின் மத்தியிலும் தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 1994 இன் அதனது மட்டத்தில் பெரும்பாலும் அரைப்பங்கிற்கு வீழ்ச்சியடைந்தது. 1994 இல் அரசியல் மாற்றம், தொழிலாளர் அமைதியின்மை பிரிவினவாத பயங்கரவாதிகளுடன் அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தமையின் காரணமாக உள்நாட்டு பாதுகாப்பு நிலைமைகளில் காணப்பட்ட உறுதியற்ற தன்மை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுத் தனியார் துறை முதலீட்டாளர்களின் பொறுத்திருந்து பார்க்கும் மனப்பான்மை என்பனவற்றின் காரணமாக நேரடி தனியார் வெளிநாட்டு முதலீடுகள் 1994 இன் மட்டத்தின் மூன்றிலொரு பங்கிற்கும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. தனியார் கடன் மூலதன உட்பாய்ச்சலும் வீழ்ச்சியடைந்தமைக்கு ஆண்டின் முதலரைப் பகுதியில் எயர்லங்கா மீள் தொகுதியிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதியிடல் ஒழுங்குகள் குறைக்கப்பட்டமையும் குறுங்கால வர்த்தகக் கொடுகடன்களுடன் தொடர்பான இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பும் முக்கிய காரணங்களாகும்.

கொள்கைப் பக்கத்தில் பல சாதகமான அபிவிருத்திகள் காணப்பட்டன. திறந்த வர்த்தகம் மற்றும் செலாவணி முறைக்கான அரசின் தொடர்ச்சியான கடப்பாடு என்பனவற்றை பிரதிபலிக்கின்ற விதத்தில், ஆகக்கூடிய தீர்வையினை 45 இலிருந்து 35 சதவீதத்திற்குக் குறைத்தமை தீர்வை வீதப்பிரிவுகளை 4 இலிருந்து 3 இற்கு குறைத்தமை, மற்றும் அவ்வப்போது வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்புகள் நீக்கப்பட்டமை என்பனவற்றின் ஊடாக இவ்வாண்டில் தீர்வை அமைப்பு மேலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது. செலாவணி வீதம்

## அட்டவணை 9.1

## சென்மதி நிலுவை - பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1991 - 1995


| | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
| 1. வணிகப் பொருட்கள் | -726 | -740 | -825 | 1,089 | -921 | - 41,253 | - 45,784 | - 55,486 | 77,190 | -71,529 |
| ஏற்றுமதிகள் | 1,491 | 1,745 | 2,046 | 2,235 | 2,504 | 84,378 | 107,855 | 138,174 | 158,554 | 195,117 |
| இறக்குமதிகள் | 2,217 | 2,485 | 2,871 | 3,324 | 3,425 | 125,631 | 153,640 | 193,660 | 235,744 | 266,646 |
| 2. பணிகள் | -66 | -24 | 28 | 8 | 8 | - 3,773 | - 1,430 | 1,821 | 520 | 639 |
| பெறுகைகள் | 439 | 489 | 535 | 627 | 688 | 24,897 | 30,256 | 36,050 | 44,363 | 53,487 |
| கொடுப்பனவுகள் | 505 | 513 | 507 | 619 | 680 | 28,670 | 31,686 | 34,229 | 43,843 | 52,848 |
| 3. பொருட்களும் பணிகளும் (1 + 2) | -791 | -763 | -797 | - 1,081 | -913 | -45,026 | - 47,214 | -53,664 | - 76,671 | -70,890 |
| 4. மாற்றல்கள் (தேறிய) | 441 | 457 | 517 | 552 | 544 | 25,030 | 28,280 | 34,839 | 39,245 | 43,101 |
| தனியார் (தேறிய) | 293 | 328 | 402 | 438 | 448 | 16,623 | 20,253 | 27,090 | 30,989 | 34,820 |
| அலுவலர் சார் (தேறிய) | 148 | 130 | 115 | 115 | 107 | 8,407 | 8,027 | 7,749 | 8,257 | 8,282 |
| 5. நடைமுறைக்கணக்கு நிலுவை (3 + 4) | -350 | -306 | -280 | - 528 | -358 | - 19,996 | - 18,935 | - 18,825 | - 37,425 | -27,789 |
| 6. நாணயமல்லா மூலதனம் (தேறிய) | 475 | 381 | 612 | 700 | 350 | 27,171 | 23,450 | 41,066 | 49,912 | 27,221 |
| நேரடி முதலீடு | 46 | 86 | 134 | 111 | 38 | 2,633 | 5,315 | 9,107 | 7,815 | 2,931 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 24 | 18 | 48 | 20 | -2 | 1,329 | 1,122 | 3.272 | 1,334 | -90 |
| தனியார் நீண்ட காலம் (தேறிய) (ஆ) | -18 | 18 | 135 | 216 | 52 | - 1,005 | 1,162 | 8,998 | 15,628 | 4,011 |
| தனியார் குறுகிய காலம் (தேறிய) | 35 | 91 | 105 | 182 | 58 | 2,105 | 5,652 | 7,110 | 12,930 | 4,486 |
| அரசு நீண்ட காலம் (தேறிய) | 366 | 189 | 190 | 172 | 204 | 20,849 | 11,494 | 12,579 | 12,204 | 15,883 |
| உட்பாய்ச்சல் | 463 | 313 | 334 | 311 | 344 | 26,378 | 19,193 | 22,317 | 22,026 | 26,779 |
| வெளிப்பாய்ச்சல் | 97 | 124 | 144 | 139 | 140 | 5,529 | 7,699 | 9,738 | 9,822 | 10,896 |
| அரசு குறுகிய காலம் (தேறிய) | 23 | -22 | 0 | 0 | 0 | 1,260 | -1,295 | 0 | 0 | 0 |
| 7. பெறுமதி சீராக்கங்கள் | | | | | | 235 | 1,555 | -1,420 | -1,380 | 6,394 |
| 8. சிஎஉ ஒதுக்கீடுகள் | | | | | | – | | | | |
| 9. பிழைகளும் தவிர்ப்புக்களும் | 27 | 59 | 44 | - 1 | -54 | 2,730 | 3,398 | 3,328 | 6,059 | -4,390 |
| 10. மொத்த நிலுவை | 152 | 133 | 375 | 173 | -62 | 10,140 | 9,469 | 24,149 | 17,166 | 1,437 |
| 11. நாணய அசைவுகள் (மிகை) | -152 | -133 | -375 | - 173 | 62 | - 10,140 | - 9,469 | - 24,149 | - 17,166 | -1,437 |
| செலாவணி வீதம் ரூ/சிஎஉ | | | | | | 56.61 | 61.75 | 67.39 | 70.75 | 77.74 |
| மொ. உ. உ. இன் விகிதமாக சதவீதங்களில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | - 11.07 | - 10.82 | - 11.10 | - 13.32 | -10.80 |
| நடைமுறைக் கணக்கு | | | | | | - 5.37 | - 4.47 | - 3.77 | - 6.46 | -4.20 |
| நடைமுறைக் கணக்கு, கொடைகள் நீங்கலாக | | | | | | - 7.62 | - 6.37 | - 5.32 | - 7.89 | -5.45 |

(அ) தற்காலிகமானவை


மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த நான்கு வானூர்திகளின் இறக்குமதியின் பேரிலான மூலதன உட்பாய்ச்சல்களுக்கு 1993 இலும், 1994 இலும், 1995 இலும் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்கும்

குறிப்பு : நாணயத்துறையிலுள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதியின் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.




சந்தைகளின் மூலமாகவே பெருமளவிற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன் இது முக்கியமான பேரண்ட பொருளாதார அடிப்படைகளையும் பிரதிபலித்தது. வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் முறையானது அனைத்து நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களும் அனைத்து மூலதன உட்பாய்ச்சல்களும், படுகடன் மீள் கொடுப்பனவுகளும் விடயத்துக்கு விடயம் கவனிக்கப்படும் வெளிநாட்டில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகள் உட்பட ஏற்றுக்கொள்ளத்தக்க மூலதன வெளிப்பாய்ச்சல்களும் ரூபாவின் மாற்றலுக்கு உறுதிப்படுத்தப்பட்டு வெளிநாட்டு கொடுப்பனவுகள் முறை மிக வெளிப்படையான தொன்றாக விளங்குகிறது. அத்துடன் மிகக்குறித்துரைக்கப்பட்ட பணிகளுடன் தனியார் மயமாக்கலுக்கான தனிச்சபையொன்றாக



அட்டவணை 9.2

வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம் 1991 - 1995

| ஆண்டு | வளர்ச்சி வீதங்கள் | | வர்த்தகச் சுட்டெண்கள் (1985 = 100) | | | விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதி விலைகள் | இறக்குமதி விலைகள் | வர்த்தக மாற்று வீதம் | ஏற்றுமதிகள்/ இறக்குமதிகள் |
| 1991 | 3.1 | 13.0 | 105.0 | 103.9 | 101.1 | 0.65 |
| 1992 | 20.3 | 11.2 | 131.6 | 108.8 | 121.0 | 0.70 |
| 1993 | 17.1 | 15.4 | 144.7 | 114.6 | 126.3 | 0.71 |
| 1994 | 9.2 | 15.7 | 151.2 | 121.0 | 125.0 | 0.67 |
| 1995 (அ) | 12.0 | 3.0 | 172.5 | 139.8 | 123.4 | 0.73 |

(அ) (ஏற்றுமதி விலைச்சுட்டெண்/இறக்குமதி விலைச்சுட்டெண்) X100
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

நிறுவப்பட்டமையானது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவியது.

மூன்றாவது அதிகரிக்கப்பட்ட அமைப்பு சீராக்க வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான முதல் தவணைப் பணமாக பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து சிஎஉ 560 இலட்சத்தினை 1994 இல் நாடு பெற்றுக் கொண்டது. 1995 இன் முதற் காலாண்டின்போது ப.நா. நிதியத்துடனான அதிகரிக்கப்பட்ட அமைப்பு சீராக்க வசதி நிகழ்ச்சித் திட்டம் சிஎஉ 560 இலட்சம் கொண்ட இரண்டாவது தவணைப் பணத்தினை எடுப்பனவு செய்யாமலேயே இறுவாயுற்றது. வெளிநாட்டுத் துறையில் இடம்பெற்ற மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் 1995 இல் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 630 இலட்சத்தினால் வீழ்ச்சியடைய வழிவகுத்தன. ஆண்டின் இறுதியில் சிஎஉ 17,290 இலட்சமாக அமைந்த மொத்த வெளிநாட்டுச் சொத்துகளின் மட்டம் 1996 இற்காகத் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் 5.4 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது. பொருட்கள், பணிகளிலிருந்தான வருவாய்களின் சதவீதமாக படுகடன் பணி விகிதம் முன்னைய ஆண்டின் 13.3 சதவீதத்திலிருந்து 13.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

## 9.2. ஏற்றுமதிகள்

### பெருந்தோட்டப் பயிர்கள்

பெருந்தோட்டப் பயிர்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 15 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து 1995 இல் வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 12 சதவீத வளர்ச்சிக்கு முழுமையாகப் பங்களித்தது. 1995இல் தேயிலையின் பெறுமதி 7 சதவீதத்தால் சிஎஉ 3,170 இலட்சத்திற்கு அதிகரித்தமைக்கு தொகையில் ஏற்பட்ட 5 சதவீத அதிகரிப்பும் விலையில் ஏற்பட்ட 2 சதவீத அதிகரிப்புமே காரணங்களாகும். முக்கியமான தேயிலை உற்பத்தி நாடுகளின் நிரம்பல் குறைவடைந்தமையினால் தேயிலையின் உலகளாவிய இருப்புக்களில் வீழ்ச்சி ஏற்பட்டமையும் ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் (தற்போது சுதந்திர அரசுகளின் பொதுநலவாயம்) சந்தை ஓரளவு மீட்சியடைந்தமையின் காரணமாக தேயிலைக்கான உலகக் கேள்வி அதிகரித்தமையும் இலங்கைத் தேயிலையின் தரம் மேம்பாடடைந்தமையும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் தேயிலையின் விலைகள் குறிப்பிடத் தக்களவிற்கு அதிகரிக்க வழிவகுத்தன. புதிய சந்தைகளில் இலங்கை தனது பங்கினை மீளக் கைப்பற்ற எடுத்த முயற்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பொநலவாய சுதந்திர நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதி 270 இலட்சம் கி. கிறாம்களால் அதிகரித்து முன்னைய ஆண்டின் 5 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 1995 இன் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 17 சதவீதத்திற்கு வகைகூறியது. இது மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதிகளைக் குறைத்து மேற்கொள்ளப்பட்டது. இத்துடன், 1995 இல் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட 2 சதவீத அதிகரிப்பும் ஏற்றுமதிக்கான நிரம்பலை அதிகரிப்பதற்கு ஓரளவு உதவின.

இறப்பரிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ 740 இலட்சத்திற்கு 46 சதவீதம்கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு, கைத்தொழில் நாடுகளில் குறிப்பாக யப்பான் ஐ. அ. நாடுகளின் கேள்வி மீட்சியடைந்தமையின் காரணமாக பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு (47 சதவீதம்) பெருமளவு காரணமாகியது. உந்து

## அட்டவணை 9.3

### ஏற்றுமதிகளின் அமைப்பு 1991 - 1995

| வகை | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | ரூ பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (ஈ) | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (ஈ) |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | 469 | 429 | 469 | 490 | 546 | 26,537 | 26,504 | 31,618 | 34,692 | 42,478 |
| 1.1 தேயிலை | 316 | 241 | 295 | 296 | 317 | 17,867 | 14,893 | 19,911 | 20,964 | 24,638 |
| 1.2 இறப்பர் | 47 | 48 | 46 | 51 | 74 | 2,641 | 2,960 | 3,086 | 3,582 | 5,713 |
| 1.3 தெங்கு | 46 | 60 | 41 | 53 | 68 | 2,619 | 3,691 | 2,796 | 3,761 | 5,271 |
| 1.3.1 உள்ளீட்டு உற்பத்திகள் | 31 | 43 | 27 | 35 | 45 | 1,769 | 2,665 | 1,847 | 2,476 | 3,520 |
| 1.3.2 ஏனையவை | 15 | 17 | 14 | 18 | 23 | 850 | 1,026 | 949 | 1,285 | 1,751 |
| 1.4 சிறுவேளாண்மை உற்பத்திகள் | 60 | 80 | 87 | 90 | 88 | 3,409 | 4,959 | 5,825 | 6,385 | 6,857 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஈ) | 904 | 1,251 | 1,502 | 1,672 | 1,887 | 51,188 | 77,281 | 101,437 | 118,544 | 147,095 |
| 2.1 புடவைகளும் ஆடைகளும் | 588 | 862 | 1,009 | 1,081 | 1,218 | 33,261 | 53,209 | 68,150 | 76,685 | 94,946 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் | 58 | 45 | 57 | 56 | 56 | 3,289 | 2,771 | 3,801 | 3,959 | 4,374 |
| 2.3 ஏனையவை | 258 | 345 | 437 | 535 | 613 | 14,638 | 21,301 | 29,486 | 37,900 | 47,774 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 45 | 45 | 54 | 60 | 57 | 2,562 | 2,749 | 3,653 | 4,293 | 4,447 |
| 3.1 இரத்தினக் கற்கள் | 42 | 40 | 50 | 55 | 51 | 2,258 | 2,482 | 3,402 | 3,917 | 3,972 |
| 3.2 ஏனையவை | 4 | 4 | 4 | 5 | 6 | 204 | 267 | 251 | 375 | 475 |
| 4. வகைப்படுத்தப்படாதவை (ஆ) (இ) | 34 | 22 | 21 | 13 | 14 | 1,938 | 1,321 | 1,467 | 1,025 | 1,096 |
| மொத்த ஏற்றுமதிகள் (அ) (ஆ) | 1,452 | 1,747 | 2,046 | 2,235 | 2,504 | 82,225 | 107,855 | 138,175 | 158,554 | 195,116 |

(அ) சீராக்கப்பட்டது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் உட்பட
(இ) திருத்தியமைக்கப்பட்டது
(ஈ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மத்திய வங்கி

ஊர்திகளின் தயாரிப்பில் காணப்பட்ட அதிகரிப்பு, சீனாவிலிருந்தான கேள்வி அதிகரிப்பு, மலேசியா போன்ற முக்கிய இறப்பர் உற்பத்தியாளர்களின் வழங்கல் வீழ்ச்சியடைந்தமை ஆகியன அதற்கான காரணங்களாகும். மேலும் சத்திர சிகிச்சைக்கான கையுறைகள், பார வண்டிகளுக்கான ரயர்கள் போன்ற குறிப்பிட்ட கைத்தொழில்களினால் இயற்கை இறப்பருக்கான கேள்வி அதிகரித்துச் செல்லுகின்றது.

1995 இல் தெங்கு உற்பத்திப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 28 சதவீதத்தால் அதிகரித்து சிஎஉ 680 இலட்சமாக விளங்கியமைக்கு ஏற்றுமதித் தொகை அதிகரித்துக் காணப்பட்டதே முழுமையான காரணமாகும். சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக அதிகரித்த உள்நாட்டு நிரம்பல் அதேபோன்று ஏனைய முதன்மைத் தெங்கு உற்பத்திப் பிரதேசங்களின் மிகை நிரம்பல் என்பன தேங்காயின் விலைகளைக் குறைத்துவிட்டன. 1995 இல் தெங்கு உற்பத்திப்பொருட்களின் சராசரி ஏற்றுமதி விலைகள் ஐ. அ. டொலர் நியதிகளில் அதிகரித்தபோதும் சிஎஉ நியதிகளில் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

### ஏனைய வேளாண்மை உற்பத்திகள்

1995 இல் ஏனைய வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 1994 இல் பதிவுசெய்யப்பட்ட 4 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. பூக்கும் காலத்தில் நிலவிய மழையைக் கொண்ட வானிலைத் தன்மையின் காரணமாக சில வேளாண்மைப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இதற்கான ஓரளவு காரணமாகும். 1995 இலிருந்து இந்தியாவிலிருந்தான கடுமையான போட்டியின் காரணமாக வெள்ளரிக்காய் ஏற்றுமதிகள் பின்னடைவினைக் கண்டன என இக்கைத்தொழிலின் மூலங்களிலிருந்து அறியக்கூடியதாக இருந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட காய்கறிவகைகளின் அளவு கணிசமாக 49 சதவீதத்தால் மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தமைக்கு வெள்ளரிக்காயின் தொகை 64 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாக இருந்த வேளையில் கோப்பியின் தொகையும் மிளகின் தொகையும் முறையே 71 சதவீதத்தாலும், 21 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

## கைத்தொழில் உற்பத்திகள்

கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் 13 சதவீதத்தால் சிஎஉ 18,870 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. புடவைகள் மற்றும் ஆடைகள் (13 சதவீதம்) ஏனைய பெற்றோலியமல்லாத கைத்தொழில் ஏற்றுமதிகள் (15 சதவீதம்) என்பனவற்றில் பாரிய அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

புடவைகளினதும் ஆடைகளினதும் சராசரி ஏற்றுமதி விலைகள் சிஎஉ நியதிகளில் 1994 இனைப்போன்று உறுதியாகக் காணப்பட்டன. ஆடை ஏற்றுமதிகள் தொடர்ந்தும் முன்னணி ஏற்றுமதித் துணை வகையாக விளங்கி மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறின. ஆடை ஏற்றுமதி அளவுமட்டும் 2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் விலைகள் 4 சதவீதத்தால் அதிகரித்தன. இது அனுமதிப்பங்கு, அனுமதிப்பங்கு அல்லாத இரு சந்தைகளுக்குமான அதிகரித்த ஏற்றுமதித் தொகைகளைப் பிரதிபலித்தது. அனுமதிப் பங்கிற்கான வழமையான வருடாந்த அதிகரிப்புக்கள், குறைப்பயன்பாட்டு வகைகளில் அனுமதிப் பங்கின் குறைப்புக்கள் யூலை - யூனில் அனுமதிப்பங்கினை மிகப்பிரபல்யம் வாய்ந்த பொருட்களை உள்ளடக்கி மீள அட்டவணைப்படுத்தல், அனுமதிப்பங்குகளின் பெருமளவு தாராளமானதும் புலப்படுத்துவதுமான முகாமைத்துவம் என்பன ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்கு உதவின.

பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் பெரும்பாலும் முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே (சிஎஉ 560 இலட்சம்) காணப்பட்டன. கைத்தொழில் ஏற்றுமதிகளில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் 3 சதவீதத்திற்கும் மொத்த ஏற்றுமதியில் சிறிதளவாக 2 சதவீதத்துக்கும் வகைகூறின. பேணல் நோக்கங்களுக்காக 1995 இன் முற்பகுதியில் தூய்மி தற்காலிமாக மூடப்பட்டமையும் ஒற்றோபரில் எண்ணெய்க் களஞ்சிய வசதிகளுக்கு தீயினால் ஏற்பட்ட சேதமும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவை எதிர்பார்ப்பிலும் பார்க்க உயர்வடைய வழிவகுத்தபோதும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் பாதிக்கப்படவில்லை. உண்மையில், 1995 இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளின் அளவு சிறிதளவு உயர்வடைந்ததுடன் விலைகள் முன்னைய ஆண்டினைப்போன்றே அதேமட்டத்தில் காணப்பட்டன.

1995 இல் ஏனைய பெற்றோலியமல்லா கைத்தொழில் உற்பத்திப் பொருட்களிலிருந்தான வருவாய்கள் 15 சதவீதத்தினால் உயர்வடைந்து மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் 32 சதவீதத்திற்கு வகைகூறின. அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த முக்கியவகைகளாக தோல், இறப்பர், தாள், மரம் மற்றும் மட்பாண்டம் (17 சதவீதம்) வைரங்கள் (6 சதவீதம்) உணவு, குடிபானம், புகையிலை (8 சதவீதம்) பொறிகள், எந்திரங்கள் மற்றும் மின் துணைக் கருவிகள் (27 சதவீதம்) ஆபரணங்கள் (25 சதவீதம்) என்பன காணப்பட்டன. குறிப்பாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மரபு வழியற்ற ஏற்றுமதிகளுக்காக வழங்கப்பட்ட நிதி மற்றும் நிறுவன ரீதியான ஊக்குவிப்புக்கள் இந்த விடயங்களின் ஏற்றுமதிகளுக்கு தொடர்ந்து வசதியளித்தன. இதற்கு மேலதிகமாக செதுக்கப்படாத இரத்தினக்கற்களின் இறக்குமதிகள் தாராளமயமாக்கப்பட்டமை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் பொறிகள், கருவிகள் மற்றும் ஏனைய விடயங்களின் மீதான இறக்குமதித் தீர்வை மற்றும் மொத்த விற்பனை வரிகள் நீக்கப்பட்டமை என்பனவற்றினால் 1995 இல் வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதிகள் நன்மையடைந்தன. கடந்த அண்மைக் காலங்களைப் போன்றே இந்த ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் வகை தொடர்ந்தும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டதுடன் ஏற்றுமதித்தளத்தினைப் பன்முகப்படுத்தவும் உதவியது.

## கனிப்பொருள் உற்பத்திகள்

கனிப்பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ 570 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இரத்தினக்கல் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். இரத்தினக்கற்கள் ஏற்றுமதிகளின் அளவு 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டு உற்பத்தி குறைவடைந்தமையே காரணமாகும். சுரங்கமகழ்தல் செலவு அதிகரித்தமைக்கு ஆழ்சுரங்க அகழ்வு, அதேபோன்று எரிபொருள் மற்றும் பொறித் தொகுதிகளுக்கான உயர்ந்த செலவுகளே காரணமாகும். மேலும், இத்துறை பன்னாட்டுச் சந்தையிலிருந்து குறிப்பாக அண்மையில் சந்தையில் நுழைந்துள்ள மடகஸ்கார் போன்ற குறைந்த உற்பத்திச் செலவினைக் கொண்ட நாடுகளிலிருந்து கடுமையான போட்டியை எதிர்நோக்குகின்றது. காரீயம் மற்றும் கனிப்பொருள் மணலுக்கான உயர்ந்த கேள்வி யிலிருந்து கிடைத்த நன்மையினால் ஏனைய கனிப்பொருள் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி

வருவாய்கள் சிஎஉ 60 இலட்சத்திற்கு 13 சதவீதத்தினால் உயர்வடைந்தன.

### 9.3. இறக்குமதிகள்

#### நுகர்வுப் பொருட்கள்

உணவு குடிபானம் மீதான செலவு 2 சதவீதத்தால் அதிகரித்தமையினாலும் ஏனைய நுகர்வுப் பொருட்களின் மீதான செலவு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையினாலும் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் கடுமையான வீழ்ச்சி காணப்பட்டது. 1995 இல் ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட தேய்வு காரணமாக இந்த விடயங்களுக்கான கேள்வியில் மந்த நிலையொன்று காணப்பட்டது. உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகள் (17 சதவீதம்) வானொலிப் பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் (21 சதவீதம்) ஆகியவற்றில் பெரும் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன. 1995 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட டீசல் வரியும், உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கு அரசதுறைக்கு வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகள் நிறுத்தப்பட்டமையுமே 1995 இல் உந்து ஊர்திகளின் இறக்குமதிக் கேள்வியை கட்டுப்படுத்திய காரணிகளாகும்.

வர்த்தகக் கணக்கில் அரிசியினதும் சீனியினதும் ஒவ்வொன்றும் 6 சதவீதம் அதிகரித்த பன்னாட்டு விலைகளின் தாக்கமானது அதிகரித்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் கிடைக்கக்கூடிய இருப்பிலிருந்து பெறுதல் என்பனவற்றின் காரணமாக இறக்குமதிகளின் அளவு குறைந்தமையினால் எதிரீடு செய்யப்பட்டது. இதன் விளைவாக அரிசியினதும், சீனியினதும் இறக்குமதிச் செலவுகள் முறையே 83 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பால் மற்றும் பால் உற்பத்திப்

அட்டவணை 9.4

இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1991 – 1995

| வகை | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | ரு பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
| 1. நுகர்வுப் பொருட்கள் | 527 | 521 | 555 | 648 | 646 | 32,357 | 32,197 | 37,372 | 45,985 | 50,309 |
| 1.1 உணவும் குடிபானமும் | 296 | 298 | 299 | 337 | 343 | 16,750 | 18,395 | 20,066 | 23,914 | 26,724 |
| 1.1.1 அரிசி | 28 | 46 | 35 | 9 | 2 | 1,589 | 2,852 | 2,386 | 655 | 122 |
| 1.1.2 மா | 0 | 0 | 9 | 0 | 0 | 1 | 3 | 552 | 19 | 4 |
| 1.1.3 சீனி | 91 | 80 | 84 | 125 | 112 | 5,138 | 4,952 | 5,621 | 8,875 | 8,716 |
| 1.1.4 ஏனையவை | 177 | 172 | 171 | 203 | 230 | 10,020 | 10,588 | 11,507 | 14,365 | 17,882 |
| 1.2 ஏனையவை | 276 | 224 | 256 | 311 | 303 | 15,607 | 13,802 | 17,306 | 22,071 | 23,585 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 1,135 | 1,337 | 1,539 | 1,689 | 1,909 | 64,265 | 82,592 | 103,952 | 119,829 | 148,624 |
| 2.1 பெற்றோலியம் | 288 | 226 | 221 | 206 | 255 | 12,887 | 13,938 | 14,920 | 14,641 | 19,829 |
| 2.2 வளமாக்கி | 43 | 38 | 46 | 44 | 57 | 2,430 | 2,366 | 3,108 | 3,097 | 4,436 |
| 2.3 இரசாயனம் | 64 | 67 | 78 | 84 | 94 | 3,643 | 4,125 | 5,244 | 5,975 | 7,329 |
| 2.4 கோதுமை | 58 | 74 | 83 | 82 | 129 | 3,303 | 4,549 | 5,609 | 5,825 | 10,014 |
| 2.5 புடவைகளும் ஆடைகளும் | 364 | 543 | 617 | 723 | 763 | 20,611 | 33,552 | 41,740 | 51,299 | 59,383 |
| 2.6 ஏனையவை | 378 | 390 | 494 | 550 | 612 | 21,391 | 24,062 | 33,331 | 38,992 | 47,633 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 526 | 604 | 750 | 952 | 782 | 29,792 | 37,294 | 50,508 | 67,524 | 60,907 |
| 3.1 பொறியும் கருவியும் | 210 | 277 | 332 | 390 | 331 | 11,881 | 17,098 | 22,377 | 27,635 | 25,762 |
| 3.2 போக்குவரத்துக் கருவி * | 134 | 128 | 224 | 316 | 200 | 7,607 | 7,889 | 15,012 | 22,425 | 15,562 |
| 3.3 கட்டடப் பொருட்கள் | 121 | 129 | 138 | 168 | 179 | 6,840 | 7,936 | 9,342 | 11,898 | 13,956 |
| 3.4 ஏனையவை | 61 | 71 | 56 | 79 | 72 | 3,464 | 4,371 | 3,777 | 5,566 | 5,627 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள் | 4 | 24 | 26 | 32 | 83 | 229 | 1,472 | 1,718 | 2,238 | 6,478 |
| மொத்த இறக்குமதிகள் (ஆ) | 2,237 | 2,487 | 2,870 | 3,321 | 3,421 | 126,643 | 153,555 | 193,550 | 235,576 | 266,319 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது.
* 1993, 1994, 1995 இல் இறக்குமதி செய்யப்பட்ட வானூர்திகளின் பெறுமதிகளையும் உள்ளடக்கும்.

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம்,
வரையறுக்கப்பட்ட இலங்கை வளமாக்கிக் கூட்டு நிலையமும் ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி.

பொருட்களின் இறக்குமதிச் செலவு அதிகரித்த பன்னாட்டு விலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் 19 சதவீதத்தால் அதிகரித்தன.

## இடைநிலைப் பொருட்கள்

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 13 சதவீதத்தால் அதிகரித்து கோதுமைத்தானியம் (57 சதவீதம்), வளமாக்கி (30 சதவீதம்), பெற்றோலியம் (23 சதவீதம்), தாளும் தாள் அட்டைகளும் (21 சதவீதம்) ஆகியவற்றில் பெரும் அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன. முக்கியமான கோதுமை உற்பத்தி நாடுகளில் வரலாற்று ரீதியில் மிகக் குறைந்த உற்பத்தி காரணமாக அதிகரித்த பன்னாட்டு கோதுமை விலைகளும் முக்கிய நுகர்வு நாடுகளில் அதிகரித்துச் காரணமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக மேலும் சிக்கலாக்கப்பட்டது. இருப்பிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்டமையினாலும், அதிகரித்த உள்ளூர் நூல் உற்பத்தியினாலும் மூலப் பொருள் தேவைகள் நிறைவு செய்யப்பட்டமையினால் புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 13 சதவீத வளர்ச்சிக்கெதிராக புடவைகளின் இறக்குமதிகள் 6 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தன. வளமாக்கியைப் பொறுத்தவரையில் வளமாக்கி உதவிக் கொடுப்பனவு மீள அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் உள்ளூர்க் கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பை ஈடுசெய்வதற்காக உயர்ந்த அளவில் வளமாக்கியை இறக்குமதி செய்யப்படவேண்டியிருந்தது. அத்துடன்,

அட்டவணை 9.5

1995 இல் முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெற்றிக் தொன்கள்

| மாதம் | | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகெண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | ... | 7,828 | 128,472 | 45,900 | 111,051 | 88,200 |
| பெப்புருவரி | ... | 240 | 82,056 | 26,383 | 97,169 | 44,200 |
| மாச்சு | ... | 97 | 104,293 | 60,659 | 123,745 | 52,100 |
| ஏப்பிறல் | ... | 83 | 52,133 | 25,115 | 55,525 | 29,100 |
| மே | ... | 173 | 104,160 | 37,324 | 235,982 | 45,300 |
| யூன் | ... | 63 | 57,073 | 13,756 | 160,880 | 22,700 |
| யூலை | ... | 65 | 166,370 | 14,702 | 146,073 | 13,100 |
| ஓகத்து | ... | 204 | 52,080 | 36,737 | 146,074 | 10,800 |
| செத்தெம்பர் | ... | 106 | 104,452 | 43,239 | 291,508 | 32,300 |
| ஒற்றோபர் | ... | 210 | 100,653 | 23,532 | 164,033 | 32,500 |
| நவெம்பர் | ... | 100 | 53,573 | 38,650 | 164,021 | 36,500 |
| திசெம்பர் | ... | 287 | 52,080 | 50,912 | 164,035 | 45,600 |
| மொத்தம் (அ) | ... | 9,456 | 1,057,395 | 416,909 | 1,860,096 | 452,400 |

(அ) சீராக்கப்பட்டது

மூலங்கள் : இலங்கைச் சுங்கம், கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்

செல்லும் கேள்வியைப் பொறுத்தவரையில் 20 ஆண்டுகளில் குறைவடைந்த உலக கோதுமை இருப்புக்களும் 1995 இல் உலக கோதுமை விலைகளை 33 சதவீதத்துக்கும் மேலாக உயர்த்தின. இலங்கை மீது அதிகரித்த இவ்விலைகளின் தாக்கமானது 1994 இல் கோதுமை மாவுக்கான உதவிக்கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதிகரித்த உள்ளூர்க் கேள்வியின் உக்ரேனிலிருந்தான குறைந்த வளமாக்கி வழங்கல்களினாலும், இந்தியா, சீனா போன்ற ஏனைய நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியினாலும் உலக வளமாக்கி விலைகள் அதிகரித்தன. ஆண்டின் தொடக்கத்தில் பேணல் நோக்கங்களுக்காக தற்காலிகமாக தூய்மி மூடப்பட்டமையின் விளைவாக மசகெண்ணெய் இறக்குமதிகளின் அளவு 2 சதவீதத்தால்

வீழ்ச்சியடைந்த வேளையில் எண்ணெய் சேகரிப்புத்தாங்கிகளில் தீப்பிடித்ததன் விளைவாக ஏற்பட்ட இழப்புக்களின் காரணமாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டமையினால் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சராசரி இறக்குமதி விலையும் 1995இல் 3 சதவீதத்தால் அதிகரித்தது. தயாரிப்புத்துறையிலிருந்தான உயர்ந்தகேள்வி தொடர்ந்தும் உறுதியாக விளங்கியமையால் ஏனைய எல்லா இடைநிலைப் பொருட்களினதும் இறக்குமதிகள் 1995 இல் 10 சதவீதத்தால் அதிகரித்தன.

### முதலீட்டுப் பொருட்கள்

1995 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 18 சதவீதத்தால் சிஎஉ 7,830 இலட்சத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு போக்குவரத்துக் கருவி (37 சதவீதம்), பொறி மற்றும் கருவி (15 சதவீதம்), ஏனைய முதலீட்டுப் பொருட்கள் (8 சதவீதம்) ஆகியவற்றிலேற்பட்ட வீழ்ச்சிகளே முக்கியமான காரணங்களாகும். எயர் லங்காவின் வானூர்தி இறக்குமதிகள் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 1995 இல் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. போக்குவரத்துக் கருவிகள் மீதான (வானூர்தி தவிர்ந்த) செலவு 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரச போக்குவரத்து ஊர்திகள் மற்றும் இழு பொறிகளின் இறக்குமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளே முக்கிய காரணமாகும். பொறி மற்றும் கருவிக்கான பிரிவிலேற்பட்ட வீழ்ச்சி தையல் எந்திரங்களின் இறக்குமதிகளிலேற்பட்ட குறைப்பில் பிரதிபலிக்கப்பட்டது. கட்டடவாக்கத் துறையில் தொடர்ச்சியான விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் 1995 இல் 7 சதவீதத்தால் அதிகரித்தன. பொருளாதாரத்தில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கான வாய்ப்பினைத் தடைசெய்யக்கூடிய வகையில் உள்ளூர் முதலீட்டில் ஏற்பட்ட பெருமளவான வீழ்ச்சியுடன் தொடர்புபட்டிருந்தமையினால், முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியிலேற்பட்ட பெருமளவான வீழ்ச்சியானது மிகவும் கடுமையாகக் கவனத்துக்கெடுக்கப்பட வேண்டியதாகும்.

### 9.4. பணிகள்

1995 இல் பணிகள் கணக்கில் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வரவுகள் முன்னைய ஆண்டில் காணப்பட்ட அதே மட்டத்தில் காணப்பட்டதுடன் வரவுகளும், கொடுப்பனவுகளும் ஒவ்வொன்றும் 10 சதவீதத்தினால் முறையே சிஎஉ 6,880 இலட்சத்துக்கும், சிஎஉ 6,800 இலட்சத்துக்கும் அதிகரித்திருந்தன. அதிகரிப்பில் பங்கெடுத்த முக்கிய விடயங்களாக பயணிகள் கட்டணங்கள், முதலீட்டு வருவாய், ஏனைய பணிகள் ஆகியன விளங்கிய வேளையில் இதே பிரிவுகளில் உயர்ந்தளவான வெளிப்பாய்ச்சல்களும் அவதானிக்கப்பட்டன. பயணிகள் கட்டண வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது எயர்லங்காவின் வானூர்திகள் தொகுதி மீளமைக்கப்பட்டதன் பின்னர் அதனது பயணங்களினதும் பறப்புக்களினதும் இயலளவிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக எயர்லங்காவின் நடவடிக்கைகளின் விரிவாக்கத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

1995 செத்தெம்பர் வரையுமான சுற்றுலா வருகைகள் 1994 உடன் ஒப்பிடுகையில் முழுமையான அதிகரிப்பொன்றையே பதிவுசெய்தன. எனினும், ஆண்டின் இறுதிக் காலாண்டில், குறிப்பாக திசெம்பர் மாதத்தில் வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் ஆண்டினிறுதியில் வருகைகளில் 1 சதவீதங்கொண்ட சிறிதளவான வீழ்ச்சி காணப்பட்டது. இத்துடன் சராசரி தங்கும் காலப் பகுதியும் 1995 இல் வீழ்ச்சியடைந்தது. இதன் இணைந்த விளைவு, சுற்றுலா வருவாய்களில் பெருமளவு வீழ்ச்சியாக இருந்த போதிலும் ஐ.அ. டொலர் நியதிகளில் 2 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. அதிகரித்துச் செல்லும் வருவாய் மட்டங்கள், முற்றாக தாராளமயமாக்கப்பட்ட நடைமுறைக் கணக்குகள் ஆகியவற்றினால் வதிவுடையோர் வெளிநாட்டுப் பயணங்களுக்கான கேள்வி அதிகரித்தமைக்கு, பயண முகவர்களினால் வழங்கப்பட்ட தொகுதிப் பயணங்களுக்கான எண்ணிக்கை அதிகரித்தமை சான்று பகர்ந்தது. இத்தகைய நிலைமையானது கல்விக்காகவும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக குடிபெயர்தலுக்காகவும் அதிகரித்த பயணங்களுடன் இணைந்து முன்னைய ஆண்டினைவிட கூடுதலான வெளிப்பாய்ச்சல்களை விளைவித்தன.

நாட்டின், வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 630 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்த போதிலும், ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பன்னாட்டு உயர் வட்டி வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுடனும், மத்திய வங்கியின் வெளிநாட்டு முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான மாற்றங்களுடனும் இணைந்த வகையில் வட்டி வருவாய்கள் அதிகரித்தன. பயங்கரவாதிகளுடனான மோதல்கள் தீர்க்கப்படாததன் பின்னணியில் முதலீட்டாளர்களின் எச்சரிக்கைத்

## அட்டவணை 9.6

### பணிகளும் மாற்றல்களும் 1991 – 1995

| விடயம் | சிஎஉ ப. இ | | | | | ரூ. ப. இ. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
| 1. துறைமுக போக்குவரத்து, காப்புறுதி ... | 28 | 32 | 74 | 96 | 88 | 1,588 | 1,964 | 4,944 | 6,826 | 6,802 |
| வரவுகள் ... | 150 | 157 | 171 | 207 | 223 | 8,497 | 9,696 | 11,509 | 14,626 | 17,352 |
| கொடுப்பனவுகள் ... | 122 | 125 | 98 | 111 | 136 | 6,910 | 7,731 | 6,565 | 7,801 | 10,549 |
| 2. பயணம் ... | 45 | 60 | 60 | 43 | 26 | 2,545 | 3,711 | 3,985 | 2,995 | 2,031 |
| வரவுகள் ... | 116 | 139 | 146 | 161 | 149 | 6,571 | 8,573 | 9,815 | 11,375 | 11,569 |
| கொடுப்பனவுகள் ... | 71 | 79 | 86 | 118 | 123 | 4,026 | 4,862 | 5,831 | 8,380 | 9,539 |
| 3. முதலீட்டு வருவாய் ... | -130 | -127 | -88 | -117 | -91 | -7,367 | -7,821 | -5,979 | -8,310 | -7,082 |
| வரவுகள் ... | 40 | 48 | 79 | 100 | 140 | 2,259 | 2,997 | 5,366 | 7,111 | 10,868 |
| கொடுப்பனவுகள் ... | 170 | 175 | 168 | 217 | 231 | 9,627 | 10,818 | 11,345 | 15,422 | 17,950 |
| 3.1 இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | -13 | -22 | -19 | -51 | -46 | -718 | -1,391 | -1,316 | -3,666 | -3,599 |
| வரவுகள் ... | 2 | 1 | 4 | 1 | 1 | 89 | 84 | 279 | 33 | 54 |
| கொடுப்பனவுகள் ... | 14 | 24 | 24 | 51 | 47 | 807 | 1,476 | 1,595 | 3,699 | 3,654 |
| 3.2 வட்டி ... | -117 | -104 | -69 | -66 | -45 | -6,649 | -6,430 | -4,662 | -4,645 | -3,483 |
| வரவுகள் ... | 38 | 47 | 75 | 99 | 139 | 2,170 | 2,913 | 5,087 | 7,078 | 10,814 |
| கொடுப்பனவுகள் ... | 156 | 151 | 144 | 165 | 184 | 8,820 | 9,342 | 9,750 | 11,723 | 14,296 |
| 4. அரச பணிகள் ... | -3 | -3 | -11 | -5 | -7 | -170 | -176 | -714 | -373 | 568 |
| வரவுகள் ... | 17 | 14 | 11 | 17 | 13 | 953 | 826 | 736 | 1,225 | 995 |
| கொடுப்பனவுகள் ... | 20 | 16 | 22 | 23 | 20 | 1,123 | 1,001 | 1,450 | 1,598 | 1,563 |
| 5. ஏனைய பணிகள் ... | -5 | 15 | -6 | -9 | -7 | -369 | 891 | -415 | -617 | -544 |
| வரவுகள் ... | 117 | 132 | 127 | 142 | 163 | 6,616 | 8,165 | 8,623 | 10,025 | 12,703 |
| கொடுப்பனவுகள் ... | 122 | 117 | 134 | 151 | 170 | 6,985 | 7,273 | 9,038 | 10,642 | 13,247 |
| 6. மொத்தப் பணிகள் ... | -65 | -23 | 28 | 8 | 8 | -3,773 | -1,430 | 1,821 | 520 | 639 |
| வரவுகள் ... | 440 | 489 | 535 | 627 | 688 | 24,897 | 30,256 | 36,050 | 44,363 | 53,487 |
| கொடுப்பனவுகள் ... | 505 | 513 | 507 | 619 | 680 | 28,670 | 31,686 | 34,229 | 43,843 | 52,848 |
| 7. தனியார் மாற்றல்கள் ... | 293 | 328 | 402 | 438 | 448 | 16,623 | 20,253 | 27,090 | 30,989 | 34,820 |
| வரவுகள் ... | 323 | 389 | 454 | 499 | 526 | 18,311 | 24,037 | 30,592 | 35,345 | 40,891 |
| கொடுப்பனவுகள் ... | 30 | 61 | 52 | 61 | 78 | 1,688 | 3,784 | 3,501 | 4,357 | 6,071 |
| 8. அலுவல்சார் மாற்றல்கள் | 148 | 130 | 115 | 117 | 107 | 8,407 | 8,027 | 7,749 | 8,257 | 8,282 |
| வரவுகள் ... | 148 | 130 | 115 | 117 | 107 | 8,407 | 8,027 | 7,749 | 8,257 | 8,282 |
| கொடுப்பனவுகள் ... | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 9. மொத்த மாற்றல்கள் ... | 441 | 457 | 517 | 554 | 554 | 25,030 | 28,280 | 34,839 | 39,245 | 43,101 |
| வரவுகள் ... | 471 | 519 | 569 | 616 | 633 | 26,718 | 32,064 | 38,341 | 43,602 | 49,173 |
| கொடுப்பனவுகள் ... | 30 | 61 | 52 | 61 | 78 | 1,688 | 3,784 | 3,501 | 4,357 | 6,071 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

குறிப்பு : 1993 ஆம் ஆண்டின் பின்னர் தரவுச் சேகரிப்பு முறை திருத்தப்பட்டுள்ளமையால் பணிகள் துறையின் குறிப்பாக வகைகள் 1, 4 மற்றும் 5 இன் பகுப்பாய்வுகள் முன்னைய ஆண்டுகளுடன் நேரடியாக ஒப்பிடத்தக்கனவல்ல.

தன்மை காரணமாக இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் தொடர்பான வெளிப்பாய்ச்சல்கள், இலங்கையின் மீள் முதலீட்டுக்காக பயன்படுத்தப்பட்ட தொகைக்கு மேலான அதிகரிப்பைக் காட்டின.

### 9.5. மாற்றல்கள்

1995 காலப்பகுதியில் தேறிய மாற்றல்கள் சிஎஉ 5,540 இலட்சத்துக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு அலுவல்சார் மாற்றல்கள் 1994 இன் சிஎஉ 1,170 இலட்சத்திலிருந்து 1995 இல் சிஎஉ 1,070 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். வெளிநாட்டில் தொழிலுக்காக குடியகன்றோரின் குடும்பங்களின் பேணலுக்காக பணவனுப்பல்கள் தொடர்ந்தும் வழமைபோன்று இடம்பெற்றமையின் காரணமாக சிஎஉ நியதிகளில் முன்னைய ஆண்டிலும் பார்க்க மெதுவான வளர்ச்சியைக் காட்டியபோதிலும் ஐ. அ. டொலர் நியதிகளில் தனியார் மாற்றல் பெறுகைகளின் வளர்ச்சி 12 சதவீதத்தில் உறுதியாக இருந்தது.

### 9.6. மூலதன அசைவுகள்


1994 இன் சிஎஉ 7,000 இலட்சத்திலிருந்து 1995 இல் சிஎஉ 3,500 இலட்சத்திற்குக் குறைவடைந்தமையின் மூலம் தேறிய உட்பாய்ச்சலில் பெரும் குறைப்பைப் பதிவு செய்த மூலதனக் கணக்கின் குறைந்த செயலாற்றமானது வர்த்தகக் கணக்கிலும் (இறக்குமதிகளில் குறைப்பு) திரண்ட நிலுவையிலும், அதேபோன்று பொருளாதாரத்தின் எதிர்கால உள்ளார்ந்த வளர்ச்சி ஆற்றலிலும் முனைப்பான தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

### நீண்டகால மூலதனம்

சில செயற்றிட்டங்களில் செயற்றிட்ட உதவியானது குறைவாகப் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அரசிற்கான நீண்டகால மூலதன உட்பாய்ச்சலானது வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க ஓரளவு குறைவாக இருந்தபோதும் 11 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சலுகை ரீதியான உதவிகளின் முக்கிய மூலங்களாக யப்பான் (சிஎஉ 1,350 இலட்சம்), பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (சிஎஉ 710 இலட்சம்), ஆசிய அபிவிருத்தி வங்கி (சிஎஉ 580 இலட்சம்) என்பன தொடர்ந்தும் விளங்கி அவற்றின் ஒன்றுசேர்ந்த மொத்த உட்பாய்ச்சலான சிஎஉ 3,440 இலட்சத்தில் ஏறத்தாழ 77 சதவீதத்திற்கு வகைகூறின. மொத்த உட்பாய்ச்சல் அதிகரித்தமைக்கு அண்மைய கடப்பாட்டினைக் கொண்ட வெளிநாட்டுக் கடன்களின் உயர்ந்தளவு பகிர்ந்தளிப்புக்களே காரணமாகும்.

வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயு கம்பனியின் விற்பனையிலிருந்து பெற்ற தனியார் மயமாக்கல் பணத்தினையும் உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடு சிஎஉ 380 இலட்சத்திற்கு 66 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏப்பிறலின் பின்னர் பாதுகாப்பு சூழ்நிலையில் தோன்றிய நிச்சயமற்ற தன்மை, அண்மையில் காணப்பட்ட தொழிலாளர் அமைதியின்மை, உத்தேச தொழிலாளர் சாசனத்தில் சாத்தியமான சிக்கல்கள் பற்றிய நிச்சயமற்ற தன்மை 17 ஆண்டுகளின் பின்னர் 1994 இல் அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து முதலீட்டாளர்களின் பொறுத்திருந்து பார்க்கும் தன்மை என்பன காரணங்களாகும்.

1995 இல் எயர்லங்கா மீள் தொகுதியிடல் நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கிற்கான நிதியிடல் ஒழுங்குகளின் ஐந்தாவதும் இறுதியானதுமான வானூர்தி (சிஎஉ 680 இலட்சம்) வந்து சேர்ந்ததைத் தொடர்ந்து இவ்வொழுங்குகள் முடிவடைந்துவிட்டதுடன் 1995 இல் தனியார் நீண்டகாலக் கடன்களில் உட்பாய்ச்சல் முன்னைய இரு ஆண்டுகளிலும் பார்க்க குறைவாக இருந்தது. காசு உட்பாய்ச்சல் சரியாக அமையாமை மற்றும் மூலவளப் பிரச்சினை என்பனவற்றின் காரணமாக இரு அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் அவற்றின் நீண்டகாலக் கடன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்காக 1995 இறுதியில் வெளிநாட்டிலிருந்து ஐ. அ. டொலர் 570 இலட்சத்தினைப் பெற்றுக்கொண்டன. எனினும் இக்கடன்களில் ஐ. அ. டொலர் 140 இலட்சம் மட்டுமே 1995 இல் பகிர்ந்தளிக்கப்பட்டது. முதலீட்டாளர்கள், மேலதிகமான இயலளவை நிறுவுவதிலும் பார்க்க தற்போதுள்ள இயலளவைப் பயன்படுத்திக்கொள்ளும் மனப்பான்மையையே கொண்டுள்ளமையும் நீண்டகால கடன் மூலதனத்தின் பாய்ச்சலைக் குறைத்துவிட்டது. அதேவேளை இவ்வாண்டில் முதலீட்டுச்சபையின் தொழில் முயற்சிகளுக்கான வெ. நா. வ. தொ.




வரைபடம் 9.3
மூலதனப் பாய்ச்சல்

பிரிவுகளின் கடன் வழங்கல் மதிப்பிடப்பட்ட சிஎஉ 350 இலட்சத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையின் மூலம் பொருளாதார நடவடிக்கைகளையும் புதிய முதலீடுகளையும் ஓரளவிற்கு பேணுவதற்கு உதவின.

### குறுங்கால மூலதனம்

தனியார் துறையின் குறுங்காலக் கொடுகடன்களின் பயன்பாடு முன்னைய ஆண்டின் சிஎஉ 1,820 இலட்சத்திலிருந்து 1995 இல் சிஎஉ 580 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிக் கொடுகடன்களின் பேரில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 1995 இல் சிஎஉ 100 இலட்சத்தினை மீளச் செலுத்தியது. புதிய முதலீடுகளின் மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, அதேபோன்று இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் சார்புரீதியில் அவை தொடர்பான ஏற்றுமதி வளர்ச்சி வீதத்திலும் பார்க்க மந்தமான வளர்ச்சியைக் கொண்டிருந்தமை என்பனவற்றில் குறுங்காலக் கொடுகடன்களின் வீழ்ச்சி பிரதிபலித்தது. உயர்ந்த இருப்புக்களை வைத்திருப்பதனால் ஏற்படும் அதிகரித்த அமையச் செலவுகளை நீக்கிவிடுவதற்காக தயாரிப்பாளர்கள் இருப்புக்களை அனுமதிப்பதன் மூலம் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்கான வர்த்தகக் கொடுகடன்களின் பயன்பாட்டினை ஆகக்குறைத்துக் கொண்டனர். இதேவேளையில் முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளினால் வைத்திருக்கப்பட்ட கரைகடந்த நிலுவைகள் கணிசமாக அதிகரித்து குறுகியகால மூலதனத்தின்அதிகரித்த வெளிப்பாய்ச்சலுக்கு இட்டுச் சென்றது.

இவ்வாண்டில் பங்குச் சந்தையினூடான சொத்துப்பட்டியல் முதலீடுகள் மந்தமாகவே காணப்பட்டன. எனினும், 1995 யூனுக்கும் நவெம்பருக்கும் இடையில் ஓரளவு சாதகமான அபிவிருத்தி காணப்பட்டது. இக்காலப்பகுதியில் ஏற்பட்ட ஏறத்தாழ சிஎஉ 90 இலட்சம் கொண்ட வெளிநாட்டு மூலதனங்களின் தேறிய உட்பாய்ச்சல் முதல் ஐந்து மாதங்களில் ஏற்பட்ட தேறிய வெளிப்பாய்ச்சலை பெரும்பாலும் எதிரீடு செய்தது. உலகின் நிதியியல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச்




அட்டவணை 9.7

இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1991 – 1995

| கால முடிவில் உடைமையாளர் | சி. எ. உ. பத்து இலட்சம் (அ) | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 |
| 1. அரசு (ஆ) | 27 | 23 | 23 | 16 | 12 | 1,632 | 1,482 | 1,597 | 1,132 | 938 |
| 2. அரசு முகவரகங்கள் | – | – | – | 0 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 |
| 3. மத்திய வங்கி (இ) | 476 | 658 | 1,194 | 1,373 | 1,375 | 28,957 | 41,592 | 81,404 | 99,859 | 110,521 |
| 4. வர்த்தக வங்கிகள் | 306 | 366 | 326 | 403 | 341 | 18,633 | 23,161 | 22,256 | 29,349 | 27,446 |
| 5. மொத்தம் | 809 | 1,047 | 1,544 | 1,792 | 1,729 | 49,223 | 66,236 | 105,258 | 130,340 | 138,905 |
| 6. மாதங்களின்படி மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| 6.1வணிக வர்த்தக இறக்குமதிகள் | 4.4 | 5.1 | 6.5 | 6.5 | 6.1 | | | | | |
| 6.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 3.6 | 4.2 | 5.5 | 5.5 | 5.1 | | | | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணயநிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு முடிவு வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|---|
| சிஎஉ ஒன்றுக்கு ரூபா | 60.85 | 63.33 | 68.19 | 72.76 | 80.39 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புச் சுழல்வுக் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985 இலிருந்தான எண்தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(இ) வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான ஒதுக்குத்தோவையாக மத்திய வங்கியில் வைப்புச்செய்யப்பட்டுள்ள அவ்வங்கியின் வெளிநாட்டு நாணயங்களையும் உள்ளடக்குவதற்காக 1993இலிருந்தான எண் தொகைகள் திருத்தப்பட்டுள்ளன.


சந்தைகளின் உறுதிப்பாட்டினைக் குலைத்த மெச்சிக்கோ நெருக்கடியின் பின்னர், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைபோன்ற வளர்ந்துவரும் சந்தைகளிலிருந்து நன்கு உறுதியடைந்த நிதி மையங்களை நோக்கி மீண்டும் இயல்பாக மாறிச் சென்றனர்.

## 9.7. வெளிநாட்டுச் சொத்துக்கள்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1994 இறுதியின் சிஎஉ 17,920 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் சிஎஉ 17,290 இலட்சத்திற்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சி முழுவதும் 1995 இல் சிஎஉ 620 இலட்சத்தினால் சிஎஉ 3,410 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த வர்த்தக வங்கிகளின் சொத்துக்களில் பிரதிபலிக்கப்பட்டது. மத்திய வங்கியினதும் அரசினதும் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 13,890 இலட்சத்திலிருந்து சிஎஉ 13,870 இலட்சத்திற்கு மிகச்சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1995 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1996 இற்கு திட்டமிடப்பட்ட இறக்குமதிகளின் 5.4 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப்போதுமானதாகக் காணப்பட்டவேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளின் 4.3 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப்போதுமானதாகக் காணப்பட்டன.

## 9.8. செலாவணி வீத அசைவுகள்

பன்னாட்டுச் செலாவணிச் சந்தைகளில் முக்கிய நாணயங்களுக்கிடையிலான செலாவணி வீதங்கள் பெருமளவிற்கு அடிக்கடி மாறும் தன்மைக்கு




மத்தியில் 1994 திசெம்பர் இறுதிக்கும் 1995 திசெம்பர் இறுதிக்குமிடையில் இலங்கை ரூபா அதன் இடையீட்டு நாணயமான ஐ. அ. டொலருக்கெதிராக 7.5 சதவீதத்தினாலும் சிஎஉக்கு எதிராக 9.5 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. அதேவேளை இக் காலப்பகுதியில் வர்த்தகப் பங்காளர்கள், போட்டியாளர்கள் ஆகியோருக்கெதிரான கூட்டு பெயரளவு பயன்தரு செலாவணி வீத சுட்டென் 8 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் உண்மைப் பயன்தரு செலாவணிவீதச் சுட்டெண்ணானது 3 சதவீதத்தினால் தேய்வடைந்தமை 1995 இல் இலங்கையின் போட்டித்தன்மைக் குறிக்காட்டிகளில் சாதகமான அசைவாகக் காணப்பட்டது.

## 9.9. வெளிநாட்டுப்படுகடன்

1995 இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ 64,600 இலட்சமாக மதிப்பிடப்பட்டு இவ்வாண்டுக்காலத்தில் சிஎஉ 3,690 இலட்சங்கொண்ட அதிகரிப்பினைப்

அட்டவணை 9.8

செலாவணி வீத அசைவுகள் 1991 - 1995

| | நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ஆண்டு இறுதி வீதங்கள் ரூபாய்களில் | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீதமாற்றம் (அ)(ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 |
| 1. | டியூச் மார்க் | 28.0178 | 28.5714 | 28.7371 | 32.1622 | 37.7638 | -6.65 | -1.94 | -0.58 | -10.65 | -14.83 |
| 2. | பிரான்சிய பிராங்கு | 8.1924 | 8.3857 | 8.4655 | 9.3151 | 11.0493 | -5.86 | -2.31 | -0.94 | -9.12 | -15.70 |
| 3. | இந்திய ரூபாய் | 1.6352 | 1.7520 | 1.5774 | 1.5926 | 1.5448 | 36.57 | -6.67 | 11.07 | -0.95 | 3.09 |
| 4. | யப்பானிய யென் | 0.3390 | 0.3699 | 0.4433 | 0.5004 | 0.5255 | -13.19 | -8.35 | -16.56 | -11.41 | -4.78 |
| 5. | ஸ்டேர்லிங் பவுண் | 79.5820 | 69.4278 | 73.4972 | 78.0513 | 84.2465 | -5.02 | 14.63 | -5.54 | -5.83 | -7.35 |
| 6. | ஐ. அ. டொலர் | 42.5800 | 46.0000 | 49.5615 | 49.9800 | 54.0475 | -5.50 | -7.43 | -7.19 | -0.84 | -7.53 |
| 7. | சிஎஉ | 60.8464 | 63.3337 | 68.1932 | 72.7604 | 80.3875 | -5.91 | -3.93 | -7.13 | -6.28 | -9.49 |

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன.
(ஆ) சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக் குறிப்பு 5

### பயன்தரு செலாவணி வீதங்கள்

செலாவணி வீதமென்பது வெளிநாட்டு நாணய அலகொன்றின் பெறுமதியினை (விலைக் கேள்வி முறை) தேசிய நாணயத்தின் நியதிகளில் அல்லது தேசிய நாணய அலகொன்றின் பெறுமதியினை (அளவு விலைக் கேள்விமுறை) வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்படுவதே யாகும். செலாவணி வீதத்தினை முன்னையதில் குறிப்பிடுவதே வழமையானதாக இருக்கின்ற வேளையில், தேசிய நாணயத்தின்[1] பெறுமான அதிகரிப்பினதும் தேய்வினதும் அளவினை அளவிடுவதற்கு பின்னையதே மிகவும் பொருத்தமான குறிகாட்டியாகவுள்ளது. எடுத்துக்காட்டாக, ஐ. அ. டொலருக்கெதிரான ரூபாவின் ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 1994 இன் ரூ. 49.42 இலிருந்து 1995 இல் ரூ. 51.25 இற்கு உயர்ந்ததுடன் இதன்மூலம் இக்காலப்பகுதியில் ரூபாவின் ஐ. அ. டொலர் பெறுமதி 20.23 ஐ. அ. டொலர் சதத்திலிருந்து 19.51 ஐ. அ. டொலர் சதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி ஐ. அ. டொலருக்கெதிரான ரூபாவின் சராசரி பெயரளவு செலாவணிவீதம் 1995 இல் பெயரளவு நியதிகளில் 4 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

செலாவணிவீத மாற்றங்களை அளவிடுவதற்கு பரவலாகப் பயன்படுத்தப்படும் மற்றைய இரு குறிகாட்டிகளாக பெயரளவு பயன்தரு செலாவணி வீதமும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதமும்[2] விளங்குகின்றது.


பெயரளவு பயன்தரு செலாவணிவீதமென்பது பயன்தரு செலாவணி வீத கூடையிலுள்ள[3] ஒவ்வொரு நாணயத்தினதும் சார்பு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் வர்த்தகப் பங்குகளின் மீதான நிறையை அடிப்படையாகக் கொண்ட முக்கிய இருபுடை பெயரளவு செலாவணி வீதங்களின் நிறையேற்றப்பட்ட சராசரியேயாகும். உண்மைப் பயன்தரு செலாவணி வீதமென்பது கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயத்தினைக் கொண்ட நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுப் பயன்தரு செலாவணி வீதத்தினை சீராக்கம் செய்வதன் மூலம் பெறப்படுகின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் பணவீக்கவீதம் உற்பத்திகளின் உள்நாட்டுச் செலவுகளின் போக்குகளைப் பரந்தளவில் எடுத்துக்காட்டுகின்றன என்ற ஒரு எடுகோளின்படி உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் உள்நாட்டு உற்பத்திகளின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையைப் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளின் மாற்றங்கள், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் உட்பட வர்த்தகம் மற்றும் செலாவணி முற்றுகைளிலுள்ள மாற்றங்கள் அத்துடன் உற்பத்தியாற்றலின் மாற்றங்கள் போன்ற பெருந்தொகையான காரணிகளின் தாக்கத்தினை உள்ளடக்கப் போதுமானதாக இல்லாமையால் போட்டித்தன்மையின்போது வேறுபாடுகளை அளவிடுவதற்கு ஒருவர் உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்தில் முழுமையாகத் தங்கியிருக்கமுடியாது. மேலும், தரவுகளில் குறிப்பாக விலைக் குறிகாட்டிகளில் குறைபாடுகளும் இருக்கமுடியும்.


இவ்வாறிருந்துங்கூட, போட்டித் தன்மையை மதிப்பீடு செய்வதற்கு பயன்தரு செலாவணி குறிகாட்டிகளே பரந்தளவில் பயன்படுத்தப் படுகின்றன. பெயரளவு பயன்தரு செலாவணி வீதத்தினதும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்தினதும் முக்கிய கவனம் வர்த்தக நிலுவைகளில் குறிப்பாக வர்த்தகப் பாய்ச்சலில் மாற்றங்களைத் தூண்டும் செலாவணி வீதங்களில் குவிந்திருந்தது. உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்தின் பெறுமதி அதிகரிக்கும்போக்கு ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் இறக்குமதிப் போட்டிக் கைத்தொழில்களுக்கு பாதகமானதாகக் கருதப்படுகின்றது.

24 வர்த்தகப் பங்காளர்கள் / போட்டி நாடுகளுடனான இலங்கையின் பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் 1990 இனை அடிப்படை யாண்டாகக் கொண்டுள்ளது. இது 1995 இறுதியில் 78.2 ஆக அமைந்து கடந்த ஐந்தாண்டுகளில் 22 சதவீதம் கொண்ட தேய்வினை எடுத்துக்காட்டியது. அது பெயரளவு நியதிகளில் பங்காளர் /

போட்டியாளர் நாடுகளில் நாணயங்களிலும் பார்க்க விரைவாக தேய்வடைந்தமையைப் பிரதிபிலித்தது. உண்மைப் பயன்தரு செலாவணி வீதமும் பெயரளவு பயன்தரு செலாவணி வீதத்தின் மாறிலிகளுக்கு மேலதிகமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பணவீக்க வீதங்களில் ஏற்பட்ட மாறிலிகளினால் பாதிக்கப்பட்டதுடன், 1990 – 1995 காலப்பகுதியின் அடிப்படைச் சுட்டெண் 100 இனைச் சுற்றி – 3 சதவீதம் தொடக்கம் 13 சதவீத வீச்சுவரை தளம்பலுற்றது.




1995 இல் 24 நாடுகளின் அணைந்து பண வீக்க வீதம் இலங்கையின் ஆண்டு பணவீக்க வீதமான 11.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் (புள்ளிக்குப்புள்ளி) ஏறத்தாழ 5.5 சதவீதமாக இருந்தது. சார்பு ரீதியில் உயர்ந்த பணவீக்கவீதம் இலங்கையில் காணப்பட்டபோதும் பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் தேய்வடைந்தமையைத் தொடர்ந்து 1995 இல் உண்மைப் பயன்தரு செலாவணிவீதமும் 3.1 சதவீதத்தினால் தேய்வடைந்தது.




1 பிரித்தானிய இசுடேர்லிங் பவுணுக்கான செலாவணிவீத்தினை இசுடேர்லிங் புவுண் ஒன்றிற்கான வெளிநாட்டு நாண நியதிகளில் பொதுவாகக் குறிப்பிடுமிடத்து "அளவு விலைக் கேள்வி முறை" யினைப் பயன்படுத்துகின்றது.

2 பெயரளவில் பயன்தரு செலாவணி வீதம் என்ற கருத்து கிறிஸ்ச் மற்றும் கிக்கின்ஸ் என்போரால் (1970) தெரிவிக்கப்பட்டதன் பின்னர் மற்றையோரால் விரிவாகக் குறிப்பிடப்பட்டது. உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்தின் குறிகாட்டிகளுக்கான திருத்தப்பட்ட நிறையேற்றப்பட்ட திட்ட விபரங்களுக்கு ப.நா. நிதிய தொழிற்பாட்டு அறிக்கை டபிள்யூ பீ/87/87 இனைப் பார்க்கவும்.

3 **பெயரளவு செலாவணி வீதம் (பெ.செ.வீ.)**

$E_{SLI}$ = இலங்கை ரூபா ஒன்றிற்கான i ஆவது நாட்டு நாணயத்தின் அலுகுகளில் i ஆவது நாட்டுடனான இருபுடை பெயரளவு செலாவணிவீதம்.

**பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் (பெபசெவீ)**

$$\text{பெபசெவீ} = \prod_{1=1}^{n} (E_{SLI})^{WI}$$

இருபுடைபெயரளவு செலாவணி வீதங்களின் நிறையேற்றப்பட்ட கேத்திர கணித சராசரி இங்கு $W_1$ என்பதுi ஆவது நாட்டிற்கு வழங்கப்பட்ட நிறையாகும்.

**உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் (உபசெவீ)**

$$\text{உபசெவீ} = \prod_{1=1}^{n} \left(E_{SLI} \frac{P_{SL}}{P_I}\right)^{WI}$$

பணவீக்கத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட இருபுடை பெயரளவு செலாவணி வீதங்களின் நிறையேற்றப்பட்ட கேதிரகணித சராசரி – இங்கு $P_{SL}$என்பது இலங்கை பணவீக்க சுட்டெண் $P_i$ என்பது i ஆவது நாட்டின் பணவீக்கச் சுட்டெண்.

பெ.ப.செவீ என்பன பொதுவாக வாய்ப்பாட்டிலுள்ள இருபுடை செலாவணி வீதங்களுக்கான சுட்டெண்களைப் பயன்படுத்தி கணிக்கப்பட்ட சுட்டெண்ணாகவே காட்டப்பட்டுள்ளன. எந்தவொரு சுட்டெண்ணிலும் ஏற்படும் வீழ்ச்சி தேய்வினைக் குறிக்கும்.

## அட்டவணை 9.9

### பகிர்ந்தளிக்கப்பட்டதும் வெளிநின்றதுமான வெளிநாட்டுப் படுகடன் 1991 - 1995

| | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
| 1. நடுத்தர, நீண்டகால படுகடன் | 4,246 | 4,624 | 5,060 | 5,384 | 5,695 | 255,798 | 289,679 | 345,083 | 391,714 | 442,425 |
| 1.1 அரசு | 3,589 | 3,841 | 4,123 | 4,214 | 4,507 | 218,400 | 243,251 | 281,142 | 306,615 | 350,425 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்கள் | 141 | 176 | 246 | 349 | 370 | 8,578 | 11,121 | 16,804 | 25,414 | 28,751 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை | 120 | 129 | 144 | 159 | 157 | 7,319 | 8,173 | 9,821 | 11,576 | 12,229 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்கள் | 3 | 2 | 1 | 1 | 1 | 197 | 151 | 97 | 95 | 93 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார்துறை | 113 | 139 | 170 | 237 | 259 | 6,867 | 8,784 | 11,566 | 17,281 | 19,824 |
| 1.6 ப. நா. நி. எடுப்பனவுகள் | 280 | 338 | 376 | 422 | 400 | 14,437 | 18,199 | 25,653 | 30,734 | 31,104 |
| 2. குறுங்காலப் படுகடன் | 350 | 421 | 526 | 707 | 765 | 20,200 | 24,579 | 31,689 | 44,619 | 59,479 |
| 2.1 அரசு | 21 | 0 | 0 | 0 | 0 | 1,275 | 0 | 0 | 0 | 0 |
| 2.2 மத்திய வங்கிக் கடன்பாடுகள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2.3 ஏனையவை (ஆ) | 329 | 421 | 526 | 707 | 765 | 18,925 | 24,579 | 31,689 | 44,619 | 59,479 |
| 3. மொத்தப் படுகடன் (1 + 2) | 4,596 | 5,045 | 5,586 | 6,091 | 6,460 | 275,998 | 314,257 | 376,772 | 436,333 | 501,904 |
| **ஒப்பந்தக் குறிப்பு வகைகள்** | | | | | | | | | | |
| **நடுத்தர நீண்டகாலக் கடன்கள்** | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக் கடன்கள் | 2,393 | 2,556 | 2,711 | 2,891 | 3,103 | 145,631 | 161,873 | 184,859 | 210,354 | 241,238 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,177 | 1,251 | 1,305 | 1,239.0 | 1,262 | 71,600 | 79,234 | 88,984 | 90,147 | 98,131 |
| (3) நிரம்பலர் கொடுகடன் | 30 | 61 | 119 | 111 | 114 | 1,805 | 3,873 | 8,087 | 8,051 | 8,876 |
| (4) ப. நா. நி. - ஏனைய கடன்கள | 280 | 338 | 376 | 422 | 400 | 14,437 | 18,199 | 25,653 | 30,734 | 31,104 |
| (5) ஏனைய கடன்கள் (இ) | 366 | 418 | 550 | 721 | 816 | 22,325 | 26,499 | 37,500 | 52,429 | 63,075 |

(அ) திருத்தப்பட்டது.

(ஆ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும்; வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் இருந்தான, வர்த்தக கொடுகடன்களையும் குறுங்காலக் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

(இ) அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் தனியார் துறை கூட்டுநிலையங்களின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி.
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

அட்டவணை 9.10

## வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1991 – 1995

| விடயம் | சி எ உ பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 356 | 382 | 357 | 379 | 441 | 20,173 | 23,671 | 24,066 | 26,734 | 34,161 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 201 | 231 | 213 | 214 | 257 | 11,353 | 14,329 | 14,317 | 15,012 | 19,865 |
| (i) ப. நா. நிதியத்திற்கு | 64 | 54 | 18 | 9 | 22 | 3,600 | 3,359 | 1,119 | 616 | 1,650 |
| (ii) ஏனையவற்றிற்கு | 137 | 177 | 195 | 205 | 234 | 7,753 | 10,969 | 13,198 | 14,396 | 18,214 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 156 | 151 | 144 | 165 | 184 | 8,820 | 9,342 | 9,750 | 11,723 | 14,296 |
| (i) ப. நா. நிதியத்திற்கு | 15 | 8 | 5 | 5 | 5 | 830 | 481 | 363 | 348 | 407 |
| (ii) ஏனையவற்றிற்கு | 141 | 144 | 139 | 160 | 179 | 7,990 | 8,862 | 9,387 | 11,374 | 13,889 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் | 1,930 | 2,234 | 2,581 | 2,862 | 3,192 | 109,275 | 138,111 | 174,224 | 202,917 | 248,603 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 2,253 | 2,623 | 3,035 | 3,361 | 3,718 | 127,586 | 162,148 | 204,815 | 238,262 | 289,495 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 18.5 | 17.1 | 13.8 | 13.3 | 13.8 | 18.5 | 17.1 | 13.8 | 13.2 | 13.7 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த | 14.4 | 14.3 | 12.9 | 12.8 | 12.9 | 14.4 | 14.4 | 12.9 | 12.7 | 12.9 |
| 4.2 மேலுள்ள 3 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 15.8 | 14.6 | 11.8 | 11.3 | 11.8 | 15.8 | 14.6 | 11.8 | 11.2 | 11.8 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த | 12.3 | 12.2 | 11.0 | 10.9 | 11.1 | 12.3 | 12.2 | 11.0 | 10.8 | 11.1 |
| 5. அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 மேலே உள்ள 1 இன் பங்காக (இ) | 178.0 | 205.9 | 221.6 | 233.4 | 240.7 | 10,075.0 | 12,713.0 | 14,933.5 | 15,833.3 | 18,712.0 |
| 5.2 மேலே உள்ள 1 இன் சதவீதமாக | 50.0 | 53.9 | 62.0 | 61.5 | 54.6 | 49.9 | 51.0 | 62.1 | 59.2 | 54.8 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) ரூபாய் பெறுமதியிலும் சி எ உ. பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(இ) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்த்து.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக அரசின் நடுத்தர நீண்டகாலப் படுகடனில் பிரதிபலிக்கப்பட்டதுடன் இவை முக்கியமாக சலுகை அடிப்படையிலான உதவிக்கடன்களாக யப்பான், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிலிருந்து கிடைத்தன. அதேவேளை அரச கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற அரச உத்தரவாதப் படுகடன் சிஎஉ 3,700 இலட்சத்திற்கு உயர்வடைந்தமைக்கு எயர்லங்காவினால் மீள் தொகுதிப்படுத்தல் திட்டத்தின் இறுதிப் தவணையாகப் பெறப்பட்ட கடன்களே முக்கிய காரணமாகும். 1995 இல் தனியார்துறையில், அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட புதிய கடன்கள் எதுவும் பெறப்படவில்லை. அரச உத்தரவாதமில்லாத வெளிநின்ற தனியார்துறை வெளிநாட்டுப்படுகடன் சிஎஉ 2,370 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,590 இலட்சத்திற்கு அதிகரித்தமைக்கு முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் வெ. நா. வ. தொழில் பிரிவுகளின் கடன்பாடுகளே முழுமையான காரணமாகும். இவ்வாண்டுக்காலத்தில் சிஎஉ 220 இலட்சம் மீளச்செலுத்தப்பட்டமை, ப. நா. நி எடுப்பனவுகள் மேலும் இடம்பெறாமை என்பனவற்றின் காரணமாக ப. நா. நிதியத்திற்கான மொத்த வெளிநின்ற படுகடன் 1995 இறுதியில் சிஎஉ 4,000 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

குறுங்காலக் கொடுகடன்களின் இருப்பானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒப்புதல் கடன்கள் முதலீட்டுச்சபை, முதலீட்டுச்சபையல்லா தொழில் முயற்சிகள் இரண்டினதும் இறக்குமதி தொடர்பான வர்த்தகக் கடன்கள் மற்றும் முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் வெ.நா.வ. தொ. பிரிவுகளின் கடன்பாடுகள் என்பனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டன. 1995 இறுதியிலுள்ளவாறு அத்தகைய கடன்பாடுகள் மீதான வெளிநின்ற தொகை 1994, 1995 ஈராண்டுக்காலப்பகுதிக்கிடையில் சிஎஉ 580 இலட்சத்தினால் உயர்வடைந்தன.

## 9.10. படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

நடுத்தர நீண்டகாலக் கடன்களின் கடன்தீர்ப்பனவையும் அனைத்து வெளிநாட்டுக் கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1995 இல் 16 சதவீதத்தினால் சிஎஉ 4,410 இலட்சத்திற்கு அதிகரித்தன. கடன்தீர்ப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டும் முறையே சிஎஉ 430 இலட்சத்தினாலும் சிஎஉ 190 இலட்சத்தினாலும் அதிகரித்தன. 1989இல் பெறப்பட்ட அமைப்புச்சீராக்க வசதியின் பேரிலான மீள்கொடுப்பனவுகள் தொடங்கியதன் காரணமாக ப. நா. நிதியத்திற்கான கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அதிகரித்தன. ஏனையவர்களுக்கான கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் சிஎஉ 290 இலட்சத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டுக்காலத்தில் ஏற்றுமதிகள் 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தபோது படுகடன் பணிவிகிதம் 1994 இன் 13.3 சதவீதத்திலிருந்து 1995 இல் 13.8 சதவீதத்திற்கு அதிகரித்தமையானது படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ஏற்றுமதி வளர்ச்சியினை விஞ்சியுள்ளதை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. பொருட்கள், பணிகளின் ஏற்றுமதி மற்றும் தனியார் மாற்றல்கள் என்பனவற்றின் பெறுகைகளின் விகிதமாக படுகடன் பணிக்கொடுப்பனவுகள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 11.3 சதவீதத்திலிருந்து 11.8 சதவீதத்திற்கு அதிகரித்தன.

## 9.11. வெளிநாட்டுத்துறைக்கொள்கை

### செலாவணி வீதம்

உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்தில் காணப்பட்ட அண்மைய போக்குகள் உட்பட பல பொருளாதார மற்றும் நிதியியல் குறிகாட்டிகளை கவனத்திற்கொண்டு மத்திய வங்கி இடையீட்டு நாணயமான ஐ. அ. டொலரின் கொள்வனவு விற்பனவு வீதங்களை அவ்விரண்டு வீதங்களுக்குமிடையிலான 2 சதவீத விளிம்புடன் அறிவிப்பதுடன் இலங்கை ரூபாவில் ஐ. அ. டொலர்களை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பதற்குத் தயாராக உள்ளது. பரந்தளவான இவ்விளிம்பு வர்த்தக வங்கிகள் தமது கொள்வனவு விற்பனவு வீதங்களைக் குறிப்பிடுவதற்கு அவசியமான நெகிழ்ச்சித் தன்மைகளை வழங்கியது. மத்திய வங்கியின் கொள்வனவு விற்பனவு வீதங்களுடன் தொடர்பான சந்தையில் செலாவணி வீதங்களின் நடத்தையானது குறுங்கால செலாவணிவீத சந்தை நிலைமைகளின் குறிகாட்டியாக இருந்தது. சந்தை வீதங்கள் குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்து பின்னர் தானாகவே சரியாகிவிட்ட கடுமையான ஊகங்களைக் கொண்ட ஒரு சில குறுங்காலங்கள் நீங்கலாக 1995 இன் பெரும்பகுதியில் சந்தைவீதங்கள் மத்திய வங்கியின் கொள்வனவு வீதங்களுடன் மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டது.

### இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாடுகள்

கடந்த காலத்தைப் போன்றே ஒரு சில விதிவிலக்குகளுடன் இலங்கை சுதந்திர சந்தைக் கொள்கைகளைப் பேணியது. சுற்றாடலைப் பாதுகாத்தல், மற்றும் பண்டைய கலைப் பொருட்களைப் பேணல் என்பனவற்றின் பின்னணியில் நான்கு வகைகளின் ஏற்றுமதிகள் (முருகைக் கற்பாளங்களும் ஓடுகளும், மர மற்றும்

மரப்பொருட்கள், யானைத் தந்தம் மற்றும் தந்த உற்பத்திகள், 1945 இற்கு முன்னர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பயணிகள் உந்துஊர்திகள்) உரிமத்தின் கீழ் இருந்தன. எஞ்சியுள்ள இறக்குமதி உரிமத் தேவைப்பாடுகள் பெரும்பாலும் பொதுமக்கள் நலத்துறை, பொதுமக்கள் ஒழுங்காற்று, சுற்றாடல் பாதுகாப்பு தேசிய பாதுகாப்புக் காரணங்கள் ஆகியவற்றின் பொருட்டே பின்பற்றப்பட்டன. தனியார் மாவாலைக் கம்பனியொன்றுடன் கடந்த காலத்தில் அரசு செய்து கொண்ட உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க கோதுமை, இறுங்கு, கோதுமை மா மற்றும் இறுங்கு மா ஆகிய நான்கு விடயங்களிலும் இறக்குமதி உரிமத் தேவைப்பாடுகள் பேணப்பட்டன. உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பினை வழங்கும் நோக்குடன் குறிப்பிட்ட வேளாண்மை விடயங்களான உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், சோளம் என்பன உரிமத்தின் கீழ் காணப்பட்டன.

## புடவை அனுமதிப் பங்கு ஒதுக்கீடு

நன்மையை எதிர்பார்த்திருக்கும் ஏற்றுமதியாளர்களுக்கு புடவை அனுமதிப் பங்கின் கிடைக்கும்தன்மையை தொடர்ச்சியாக உறுதிப்படுத்தும் பொருட்டு, புடவை அனுமதிப் பங்கை ஒதுக்குதல் முக்கியமாக அவர்களது முன்னைய செயலாற்றத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப நிச்சயித்தல் ஒருமுறை மேற்கொள்ளப்பட்டதும், எஞ்சியதன் இரண்டு சதவீதம் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட விகிதசம அடிப்படையில் "சிறிய புடவை அனுமதிப் பங்கு உடைமைகள்" (முன்னைய ஆண்டிற்கான ஒன்றுமில்லை அல்லது 5,000 டசின்களுக்கும் குறைந்த)ஐ வைத்திருக்கும் ஏனைய பதிவுசெய்த ஏற்றுமதியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது. எஞ்சியவை, ஊசேநி மற்றும் ஊநநி இன் உதவுதொகைக் கொடுப்பனவுகள் போன்ற ஏனைய காரணிகளைக் கருத்திற்கொண்டு ஒரு பொதுவான குழாமிற்கு இடப்பட்டு ஏற்றுமதியாளர்களிடையே அவை ஒதுக்கப்பட்டன. குழாம் அனுமதிப் பங்குத் திட்டம் அனுமதிப் பங்குகளின் பயன்பாடு மற்றும் ஒதுக்கலை முன்னேற்றுவதுடன், இக்கைத்தொழிலுக்கு புதிதாக வருபவர்களைப் போன்றே ஏற்கனவே இருக்கும் "சிறிய அனுமதிப் பங்கு" உடைமையாளர்களுக்கும் வாய்ப்புக்களை வழங்குகின்றது.

## வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான தீர்வைகளும் வரிகளும்

தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் தீர்வைச் சீர்திருத்தங்களின் கீழ் 1995 இல் தீர்வை அமைப்பினை நியாயப்படுத்துவதில் நாடுமேலும் முன்னேற்றத்தினைக் கண்டது. 1993 நவெம்பரில் நடைமுறைக்குவந்த 45,35,20,10 சதவீத நான்கு கட்ட இறக்குமதித் தீர்வை அமைப்பை 1995 பெப்புருவரியில் 35,20,10 சதவீத மூன்றுகட்ட அமைப்பு முறையினால் மாற்றீடு செய்யப்பட்டது. எனினும் புகையிலை வெறியக் குடிவகை, மசகெண்ணெய் போன்ற ஒரு சில வகை இறக்குமதிகள் மட்டும் புதிய முறைக்கு வெளியே காணப்பட்டன.

தனிப்பட அமைந்த தீர்வைத் தளர்த்தல்கள் மற்றும் விலக்களிப்புக்கள் என்பன ஒழிக்கப்பட்டு 1995 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தீர்வை அமைப்பு மேலும் இலகுவாக்கப்பட்டது. மிகக் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட ஆண்டின் பின்னரைப் பகுதியில் தீர்வைத் தளர்த்தல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைக்கப்பட்டது. சில வேளாண்மை நடவடிக்கைகள், அதேபோன்று அச்சிடல், மர உற்பத்திப் பொருட்கள், புகைப்படக் கைத்தொழில் என்பனவற்றிற்கு உதவும் முயற்சியாக இத்துணைத்துறைகளுக்கான இறக்குமதித்தீர்வைகள் 1996 வரவு செலவுத்திட்டத்தில் குறைக்கப்பட்டன. மண்வெட்டி, மண்வாரி, போன்ற வேளாண்மைக் கருவிகள், அச்சிடுகின்ற எழுதுகின்ற தாள்கள், மற்றும் அப்பியாசப் பயிற்சிப் புத்தகங்கள் போன்றவற்றிற்கான இறக்குமதித் தீர்வைகள் 35 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மீன்பிடி வலைகளின் மீதான இறக்குமதித் தீர்வை 35 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. மீன்பிடிப் படகுகளின் கட்டுமானத்திற்குப் பயன்படும் கண்ணாடி இழைகள் மற்றும் உள்ளீட்டுப் பொருட்கள் எந்திரங்கள், குற்றிகள் அல்லது பலகைகள் வடிவில் இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துவகை மரங்கள் கச்சாப்படச்சுருள், சினிமா புகைப்படக் கருவிகள் , சினிமா எறியங்கள், திரைகள் மற்றும் உள்ளூர் படக் கைத்தொழிலுக்காக இறக்குமதி செய்யப்பட்ட குறிப்பிட்ட உதிரிப்பாகங்கள் என்பனவற்றிற்கு தீர்வை விலக்குகள் வழங்கப்பட்டன.

இரத்தினக்கல், மற்றும் ஆபரண ஏற்றுமதிகளை மேம்படுத்தும் பொருட்டு மூலப்பொருட்கள், (அதாவது இரத்தினக்கற்கள், தங்கம் மற்றும் ஏனைய துணைப் பொருட்கள்) அதேபோன்று இரத்தினக்கற்களை வெட்டுதல் பதனிடல் என்பனவற்றிற்கான கருவிகள், பொறி மற்றும் துணைக்கருவிகள் என்பன தீர்வையின்றி அனுமதிக்கப்பட்டன. அத்துடன் ஏற்றுமதிகளுக்கான தயாரிப்புக்களுக்குப் பயன்படுத்தப்படும் இறக்குமதிகளுக்கு வழங்கப்பட்ட தேசிய பாதுகாப்புத் தீர்வையிலிருந்தான விலக்களிப்புக்கள் தயாரிக்கப்பட்ட ஏற்றுமதிகள்துறையில் பயன்படுத்தப்பட்டு விரயமடைந்த பொருட்களையும் உள்ளடக்கத்தக்கதாக விரிவாக்கப்பட்டது.

1995 இல் ஏற்றுமதித்துறை தொடர்ந்தும் ஏதேனும் பெறுமான விகிதவிற்பனை வரிகள் மற்றும் தீர்வைகள் என்பனவற்றிலிருந்து நீக்கப்பட்டிருந்த வேளையில் சில விடயங்கள் மீதான ஏற்றமதித்தீர்வைகளும் உரிமக் கொடுப்பனவுகளும் நீக்கப்படாதிருந்தன. பன்னாட்டு இறப்பர் விலைகள் மேம்பாடடைந்தமையின் காரணமாக இறப்பர் ஏற்றுமதித்தீர்வைகள் 1995 பெப்புருவரியில் கி. கிறாமிற்கு ரூ. 2.21 இலிருந்து ரூ. 4.91 இற்கும் 1995 யூலையில் கி. கிறாமிற்கு ரூ. 5.41 இற்கும் உயர்த்தப்பட்டன.

சிறப்புக் குறிப்பு 6

## இலங்கையின் தீர்வைச் சீர்திருத்தங்கள்

1977 இற்கு முன்னர் அக்காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட உள்ளக அபிவிருத்தி சார்ந்த உத்திகளை உள்ளடக்கிய திரிபடைந்த வர்த்தகக் கொள்கையை இலங்கை கொண்டிருந்தது. சென்மதி நிலுவைக் காரணங்கள் அதேபோன்று பெரும்பாலும் அரசினால் தொழிற்படுத்தப்படும் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில் முயற்சிகளை இறக்குமதிப் போட்டியிலிருந்தும் பாதுகாத்தல் என்பனவற்றிற்காக இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தீர்வை மற்றும் தீர்வை அல்லா தடைகள் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்டன. தீர்வை அமைப்பு 10 சதவீதத்திலிருந்து 500 சதவீதம் வரையான வீதங்களில் வீச்சையும் 19 பிரதான தீர்வைப் பிரிவுகளையும் கொண்டிருந்தன. இத்தகைய கட்டுப்பாடான வர்த்தகக் கொள்கைகள் பொதுவாக பொருளாதார வளர்ச்சியின் மீதும் சமூக நலன்களிலும் கடுமையான பாதகமான சிக்கலைக் கொண்டிருந்தன. உயர்ந்த தீர்வைகள் மற்றும் தீர்வை அல்லா கட்டுப்பாடுகள் வர்த்தகம் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான விலைகளை திரிவுபடுத்தியதுடன் வர்த்தகம் செய்யப்படாத பொருட்கள் சிறந்த மூலவள ஒதுக்குகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. திரிவுபட்ட வர்த்தகக் கொள்கை நடைமுறையினால் வழங்கப்பட்ட மிகையான பாதுகாப்பு திறமையற்ற இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்களை ஊக்குவித்தன. அதேவேளை உயர்ந்தளவு மிகையான பெறுமதியிடப்பட்ட செலாவணிவீதம், இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் பற்றாக்குறை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் உயர்ந்த செலவு, உயர்ந்த ஏற்றுமதித் தீர்வைகள் அரச நிபுணத்துவமூடாக தொழிற்படுத்தப்பட்ட கட்டுப்பாடான ஒழுங்காற்று பொறிமுறை என்பன ஏற்றுமதிகளின் வளர்ச்சியைத்தடுத்தன.

திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்படுத்துவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான பொருளாதார சீரமைப்புக்களை நாடு மேற்கொண்ட நேரமான 1970 இன் பிற்பகுதியில் இலங்கை வர்த்தக தாராளமயமாக்கலை நோக்கிய முதலாவது முன்னேற்றம் தொடங்கியது. எனினும் முக்கியமான தீர்வைச் சீராக்கங்கள் 1980 இன் பிற்பகுதிவரை தாமதிக்கப்பட்டன. அண்மைய தீர்வைச் சீராக்கங்கள் தீர்வை அமைப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அலகிடுதல், உயர்ந்த தீர்வை வீதங்களை குறைத்தல், கட்டுப்பாடுகள் அளவினை அகற்றுதல் மற்றும் விலக்கல்களைக் குறைத்தல் என்பனவற்றின் மீது பெரும் கவனம் செலுத்தியது. அச்சீரமைப்புக்கள் செலாவணிக்கட்டுப்பாடுகளின்

### அட்டவணை 1

### நடைமுறைப்படுத்தப்படும் இறக்குமதித்தீர்வை சேகரிப்பு வீதம் (அ)

சதவீதம்

| விடயம் | 1995 | 1994 |
|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | 20.06 | 12.91 |
| **உணவும் குடிபானமும்** | 22.65 | 13.88 |
| அரிசி | 35.17 | 38.50 |
| மா | 0.04 | 0.12 |
| சீனி | 19.65 | 14.55 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 14.52 | 11.47 |
| கருவாடு | 5.16 | 1.95 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 5.50 | 4.62 |
| ஏனைய உணவு விடயங்கள் | 37.44 | 18.72 |
| **உணவு அல்லா நுகர்வுப் பொருட்கள்** | 17.25 | 11.62 |
| உந்து ஊர்திகளும் ஈருளிகளும் | 24.09 | 21.70 |
| வானொலிப்பெட்டிகளும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் | 6.08 | 6.87 |
| இறப்பர் டயர்களும் ரியூப்புக்களும் | 41.44 | 33.63 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 1.35 | 1.47 |
| ஏனைய உணவு அல்லாத விடயங்கள் | 18.19 | 11.06 |
| **இடைநிலைப் பொருட்கள்** | 7.95 | 9.10 |
| வளமாக்கி | 0.05 | 0.02 |
| மசகெண்ணெய் | 42.95 | 44.47 |
| ஏனைய பெற்றோலியம் | 18.66 | 23.43 |
| இரசாயன மூலகங்களும் கலைகளும் | 8.25 | 9.76 |
| சாயமூட்டல் தோல் பதனிடல் மற்றும் நிறமூட்டல் பொருட்கள் | 9.64 | 8.79 |
| தாள் தாள் அட்டைகள் | 10.14 | 9.81 |
| புடவையும் ஆடைகளும் | 0.93 | 1.00 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 8.45 | 9.23 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | 9.63 | 10.08 |
| கட்டடப் பொருட்கள் | 10.81 | 8.67 |
| போக்கு வரத்துக் கருவிகள் | 14.62 | 21.58 |
| பொறியும் கருவியும் | 6.02 | 6.20 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 15.00 | 10.13 |

மூலம் : சுங்கத் திணைக்களம்

(அ) இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான தீர்வைச் சேகரிப்பு


தாராளமயப்படுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீதான அரச தனியுரிமைகளை ஒழித்துவிடுதல் போன்ற மற்றைய ஒழுங்கு விதிகளைத் தளர்த்திவிடும் வழிமுறைகளுடன் இணைந்ததாக இருக்கின்றது.

படிப்படியான செயல்முறைகளூடாக பெருமளவிற்கு சிதறியிருந்த அமைப்பொன்றிலிருந்து தீர்வை வீதப் பிரிவுகளின் எண்ணிக்கை 1990 அளவில் 13 முக்கிய தீர்வை வீதங்களுக்கு குறைக்கப்பட்டது. 1991 இல் 10, 20, 35, 50 சதவீத வீதங்களை உள்ளடக்கிய நான்கு கட்டமுறை நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் தீர்வை அமைப்பு மேலும் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டது. இம்முறையானது நான்கு இலக்க மட்டத்தில் தீர்வை விடயங்களில் ஏறத்தாழ 97 சதவீதத்தினை உள்ளடக்கி நான்கு கட்ட பிரிவு முறைக்கு வெளியில் எஞ்சியுள்ள பல விடயங்களை ஏறத்தாழ 3 சதவீதத்திற்கு (வரைபடம் 1 ) குறைக்கின்றது. 1995 ஏப்பிரலில் சில குறிப்பிட்ட தீர்வைகளை 100 சதவீதங்கொண்ட பெறுமான விகிதங்களுக்கு மாற்றியமையின் மூலம் தீர்வை முறையிலிருந்த திரிபுகள் குறைக்கப்பட்டன.1993 நவெம்பரில் ஆகக்கூடிய வீதம் 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. எந்து ஊர்திகள் நியம தீர்வைக் கட்டங்களுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் மேலும் முன்னேற்றமடையப்பட்டது. உந்து ஊர்திகள் மீதான தீர்வை வீதங்கள் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டன. இயந்திரத்தின் இயலளவுகளின் படிப்படியான வேறுபாடுகள் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கு மிடையிலான வீச்சிற்கு கொண்டுவரப்பட்டன.

முன்னேற்றங்கள் அடையப்பட்டபோதும் விலக்கல்கள் தீர்வைத் தளர்த்தல்கள் குறிப்பிட்ட வகைத்தீர்வைகள், மேலதிகக் கட்டணங்கள் மறைமுகமான சமூக பொருளாதார காரணங்களுக்கான விலையை அதிகரித்துக் காட்டல்போன்றவற்றின் காரணமாக தீர்வை அமைப்பில் மேலும் திரிபுகள் காணப்பட்டன.

1995 வரவு செலவுத்திட்டம் தீர்வை சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறைந்த ஒருமுகப்படுத்தப்பட்ட ஒற்றைத் தீர்வையை நோக்கி நகரும் இறுதிக் குறிக்கோளுடன் 1995 பெப்புருவரியில் 10,20 35 சதவீதங்களைக் கொண்ட

வரைபடம் 1
தீர்வை சீரமைப்புக்கள்




3 கட்ட வீத அமைப்பு கொண்டுவரப்பட்டதன் மூலம் ஆகக்கூடிய வீதம் குறைக்கப்பட்டது. எனினும் அரசிறை மற்றும் சமூகக் காரணங்களுக்காக குடிவகை, புகையிலை, பயணிகள் உந்து ஊர்திகள், ஆடம்பரப்பொருட்கள் ஆகியவற்றிற்கு உயர்ந்த இறக்குமதித் தீர்வைகள் பேணப்பட்டன. அத்துடன் தீர்வை அமைப்பினை கூடியளவிற்கு இலகுபடுத்தவும், தெளிவாக்குவதற்குமாக எஞ்சியிருந்த சில சலுகைகளும் விலக்குகளும் புதிய தீர்வை அமைப்பின கீழ் அகற்றப்பட்டன அல்லது மாற்றப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட தீர்வை அமைப்பு உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கான பாதுகாப்பினைக் குறைத்து விடுவதன்மூலம் அவர்களை மிகத்திறன்மிக்கவர்களாக்கவும் பன்னாட்டுச்சந்தையில் பெருமளவிற்கு போட்டியிடுவதற்கும் உந்துகின்றது.

**சிறப்புக் குறிப்பு 7**

## தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை

வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கித்தான் இலங்கை என்பனவற்றை உள்ளடக்கிய பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்கிழக்காசிய அமைப்பின் (சார்க்) உறுப்பு நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தென் ஆசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (சப்ரா) 1995 திசெம்பர் 7 ஆம் நாள் தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. பிரேதசங்களிடையுள்ள தீர்வை மற்றும் தீர்வையல்லா தடைகளை அகற்றுவதன் மூலமாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகம் இரண்டையும் மேம்படுத்துவதே சப்ரா உடன்படிக்கையின் நோக்கமாகும். கொள்கையளவில் தெஆமுவ உடன்படிக்கை யானது உறுப்பினர் நாடுகள் தொடர்பான பொருளாதார மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி மட்டங்கள், அவர்களது வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் அவர்களது தீர்வைக் கொள்கைகள், உறுப்பினர் நாடுகளிடையே காணப்படும் பொருளாதார அபிவிருத்தி மட்டங்களில் காணப்படும் பரந்தளவிலான வேறுபாடுகளை அங்கீகரிக்கின்ற தன்மை ஆகியவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு அனைத்து உறுப்பினர் நாடுகளுக்கும் சமமான நன்மை வழங்கக்கூடிய பொதுவான வர்த்தக சலுகைகள் மற்றும் பரஸ்பர முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. (அட்டவணை 1) சப்ரா உடன்படிக்கை உறுப்பு நாடுகள் குறைந்த அல்லது தீர்வையை அகற்றுதல், இணைந்த தீர்வை மற்றும் தீர்வையல்லா தடைகள் மூலமாக வர்த்தகத்தை தாராளமயப்படுத்தவும் பரஸ்பர வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான மற்றைய நேரடி வர்த்தக வழிமுறைகளை மேற்கொள்ளவும் தொடக்கத்தில் உடன்பட்டுக் கொண்டன. வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் முதலாவது சுற்று முடிவில் 226 உற்பத்தி வகைகளுக்கு (அட்டவணை 2) தீர்வைச் சலுகைகள் வழங்க உடன்பாடு காணப்பட்டது.

1995 இறுதியில் எய்தப்பட்ட இம் முன்னேற்றம் சார்க் நாடுகளின் மொத்த வர்த்தகத்தில் ஏறத்தாழ 1 சதவீதத்தினை மட்டுமே உள்ளடக்குகின்ற உற்பத்திகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளபோதும் பரந்தளவான வர்த்தகத்தை உள்ளடக்கும் விதத்தில் உறுப்பு நாடுகளிடையே வர்த்தக தாராளமயமாக்கல் செயற்பாட்டினை விரைவுபடுத்துவதற்கான நடைமுறைகள் மேலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1995 இல் கூடிய சப்ராவின் வர்த்தக தாராளமயமாக்கல் மீதான அரசுகளுக்கிடையிலான குழு வர்த்தக தாராளமயமாக்கல் பற்றிய இரண்டாவது சுற்றில் தீர்வையல்லா மற்றும் மற்றைய வர்த்தகத்தடைகளை அகற்றுவதனையும் தீர்வைச் சலுகைகளை அதிகரிப்பதனைப்பற்றியும் பரிசீலிக்க உடன்பட்டது.

### அட்டவணை 1
### சப்ரா உறுப்பு நாடுகளுக்கான ஒப்பீட்டுக் குறிகாட்டிகள்

| | உண்மை மொஉஉ இல் வளர்ச்சி % 1980 - 1993 | முதலீட்டில் வளர்ச்சி % 1980 - 1993 | பணவீக்க வீதம் % 1980 - 1993 | தலைக்குரிய மொதெஉயின் கொ. க. சமப்பாடு ஐஅ டொலர் 1993 | 1000 ஆட்களுக்கு தொலைபேசி பிரதான இணைப்பு 1980 - 1993 | மின்வலு உற்பத்தி கிமாவ/ ஆட்கள் 1980 - 1993 | வயது வந்தவர்களின் கல்வி % 1992 | ஆரம்ப மாணவ ஆசிரியர் விபரம் 1993 | ஆயுட்காலம் 1993 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வங்காள தேசம் | 4.2 | 1.6 | 8.6 | 1,290 | 2 | 79 | 36.4 | 63 | 56 |
| பூட்டான் | | | | | - | - | 39.2 | - | - |
| இந்தியா | 5.2 | 5.7 | 8.7 | 1.220 | 8 | 373 | 49.9 | 63 | 61 |
| மாலைதீவு | - | - | 10.0 | - | - | - | 92.6 | - | 63 |
| நேபாளம் | 5.0 | - | 11.5 | 1.020 | 3 | 45 | 25.6 | 39 | 54 |
| பாக்கித்தான் | 6.0 | 5.6 | 7.4 | 2,170 | 10 | 435 | 35.7 | 41 | 62 |
| இலங்கை | 4.0 | 2.4 | 11.1 | 2,990 | 8 | 200 | 89.3 | 29 | 72 |

மூலங்கள் : உலக அபிவிருத்தி அறிக்கை - 1995
மானிட அபிவிருத்தி அறிக்கை - 1995

அபிவிருத்தி குறைந்த உடன்படிக்கையிலுள்ள நாடுகளுக்கு தீர்வையற்ற மற்றும் மிகப் பரந்தளவிலான தீர்வைச் சலுகைகள் ஆகிய நியதிகளில் சிறப்புச் சலுகைகளையும் வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் மேலதிக வர்த்தக வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் கூடிய நெகிழ்ச்சித் தன்மையை வழங்கவும் மற்றைய பாதுகாப்புக்களுக்கும் உடன்பட்டது.

வர்த்தக தாராள மயமாக்கல் செயற்பாட்டினை விரைவுபடுத்துவதற்கு அவர்களுக்கிடையிலான குழு நேர விரயத்தையும் தொந்தரவையும் கொண்டதாகத் தோன்றும் உற்பத்திக்கு உற்பத்தி என்ற அணுகுமுறைக்குப் புறம்பாக துறைவாரியான, குறுக்குவீத தீர்வைக் குறைப்புக்களுக்குச் சார்பான கருத்தைக் கொண்டிருந்தது.

## சிறப்புக் குறிப்பு 7 (தொடர்ச்சி)

பெரும்பாலான உறுப்பு நாடுகளில் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக சூழ்நிலையில் பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடத் தக்களவிற்கு காணப்படும் தனியார்துறையின் பங்கேற்பினை அங்கீகரிப்பதற்கு சார்க் நாடுகளின் தனியார் துறைகளிடையே நெருங்கிய ஒத்துழைப்பினையும் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டது. இதன் விளைவாக சார்க் நாடுகளிலுள்ள வியாபார சமூகத்திலுள்ள தலைவர்களின் பேராயம் 1995 இல் கொழும்பில் கூடியது. இக்கூட்டத்தில் மேலதிக பேச்சுவார்த்தைகளுக்கான வரைவுத் திட்டங்களுக்கான துறைவாரியான விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்கான குழுவை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. தனிப்பட்ட உறுப்பு நாடுகளுக்கான ஒவ்வொரு குழுவும் தனியார்துறையுடனான பொருளாதார உத்துழைப்பின் பொருட்டு மேற்கொள்ளப் படுவதற்கான மேலதிக ஆய்வினை மேற்கொள்ளவும் அவைகளை அடையாளம் காணவும் பொறுப்பாக இருக்கும். இது, வேளாண்மை (பூட்டான்) உட்கட்டமைப்பு மற்றும் வலு (பாக்கித்தான்) கைத்தொழில்

அட்டவணை 2

### தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளின் தீர்வைச் சலுகைகள் சம்பந்தமான அட்டவணை

| நாடு | தீர்வை வழிகளின் எண்ணிக்கை | முக்கிய உற்பத்திப் பொருள் வகைகள் | தெமுவஓ கீழ் சலுகை வீதங்கள் (தீர்வையின் % ஒன்றாக) | தற்போதைய வீதம்× |
|---|---|---|---|---|
| வங்காளதேசம் | 12 | முந்திரிகை, ஏலம் தேங்காய்ப்பால், சத்திர சிகிச்சை, பற்சிகிச்சைப் பொருட்கள், முதற்சிகிச்சைப் பெட்டிகள், அத்தியாவசிய எண்ணெய், கிருமி நாசினிகள், மதிப்புடைய கற்கள் | 10% | 7.5% - 60% |
| பூட்டான் | 11 | பகுதியளவு பதனிடப்பட்ட, பதனிடப்பட்ட கடல்சார் உற்பத்திப்பொருட்கள், கொக்கோவை அடிப்படையாகக் கொண்ட சாக்கேலட்டுக்குளும் ஏனைய உணவுப் பொருட்களும், தானிய உணவுவகைகள், மாவும் மாப்பொருட்களும், அழகுசாதனப் பொருட்கள், தூய்மைப்படுத்தும் சவர்க்காரங்களும் குளியலறைச் சவர்க்காரங்களும், இறப்பர்ரயர்களும், ரியூப்புக்களும், இறப்பர் கையுறைகள் அரைமதிப்பு மதிப்புக் கற்கள், சத்திரசிகிச்சைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் | 10% -15% | 10% - 50% |
| இந்தியா | 106 | கருவாடு, கறி வாசனைப் பொருட்கள், எள்ளு, தேங்காய்ப்பால், பசை, கொக்கோவும் கொக்கோ தயாரிப்புக்களும், வளமாக்கிகள், இறப்பர் ரயர்கள், ரியூப்புக்கள் மற்றும் ஏனைய இறப்பர் பொருட்கள் தோல் உற்பத்திப் பொருட்கள், தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள், பருத்தி நூல், மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள் செம்பு கழிவுப் பொருட்கள், இயற்கைக் காரீயம், தூள்களும் நுரைகளும் | 10% - 100% | 0% - 50% |
| மாலைதீவுகள் | 17 | பருப்புவகை, தண்ணீர்கொடிவகை, தக்காளிரசம், ஸ்ரோபரி, இயற்கைக் காரீயம், வாசனைத் திரவியங்கள், குளியலறை நீர், இறப்பர் ரியூப்புக்கள், தரைவிரிப்புக்களும் பாய்களும் தோல் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் பதனிடப்படாத சணல், விரிப்புக்கள், கம்பளி மற்றும் விளையாட்டுப் பொருட்கள் | 7.5 % | 15% - 25% |
| நேபாளம் | 14 | உடன் அல்லது உலர்த்திய பழங்கள், தும்புப் பொருட்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், சுவைப் பசை சீனி சேர்த்து அல்லது சேர்க்காதது, ஜிப்சம், நிலக்கரி, பரிகார மருந்துப் பொருட்கள், தோல் உற்பத்திப் பொருட்களும் மரத் தளபாடங்களும் | 7.5% - 10% | 0% - 30% |
| பாக்கித்தான் | 35 | பருப்புவகை, கறிவாசனைப்பொருட்கள், மருந்து மூலிகைகள், அலங்கார மீன்கள், சிவப்பு, முருங்கைக்கற்பாறை உலர்த்திய தேங்காய்த்துருவல், இயற்கை இறப்பர், இயற்கை காரீயம், மூங்கில், வெற்றிலை, தோல், தாள் மற்றும் தாள் அட்டை அச்சிடப்பட்ட புத்தகங்கள், மூல அல்லது பதனிடப்பட்ட சணல், மரக்கறிவிதைகள், இரும்புப்பாலங்களும் துண்டுகளும், அலுமினியம் மூலாம் பூசப்படாதது தொகுதிகளாக செறிவு செய்யப்பட்ட பலகை | 10% - 15% | 10% - 70% |
| இலங்கை | 31 | மாசிக்கருவாடும் கருவாடும், பழவர்க்கங்களும் பதனிடப்பட்ட மீனும், கொத்தமல்லி உலாத்திய இஞ்சி, வண்ணேமற்றும் பொருட்கள், மரம், ஒட்டுப்பலகையும் செறிவு செய்யப்பட்ட பலகையும், சணல்நூல், விரிப்புக்கள், இரும்பு கம்பிகள், பாலங்கள், துண்டுகள், தகடுகள், அலுமினியத்தகடுகளும் அலுமினியமும் பொறிகளும் அவற்றின் உதிரிப்பாகங்களும் அலுமினியமும் பொறிகளும் அவற்றின் உதிரிப்பாகங்களும் மோட்டார் வாகனங்களின் பாகங்களும் உதிரிப்பாகங்களும் மோட்டார் சைக்கிள்களும் அவற்றின் பாகங்களும் | 10% - 20% | 10% - 30% |
| மொத்தம் | 226 | அனைத்து விடயங்களும் | 32×× | |

× உறுப்பினர் நாடுகளின் தேசிய தீர்வை அட்டவணைகளில் சுங்கத் தீர்வைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

×× வீச்சு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் நிறையேற்றப்பட்ட இலகு சராசரி மத்திய புள்ளிகளின் அடிப்படையிலானதாகும்.

## சிறப்புக் குறிப்பு 7 (தொடர்ச்சி)

அட்டவணை 3

தெமுவஒ உறுப்பினர் நாடுகளின் முதன்மைப்பொருளாதார தரவுகள் (அ)

| நாடு | குடித்தொகை மொத்தம் ப.இ. | மொ.உ.உ ஐஅமொ ப.இ. | பிரதேச மொத்த உள்நாட்டு உற்பத்தியில பங்கு % | தலைக்குரிய மோதேஉ ஐஅடோ | ஏற்றுமதிகள் ஐஅடோ ப.இ. | இறக்குமதிகள் ஐஅடோ ப.இ | மொத்த வர்த்தகத்தில் % ஒன்றாக தெமுவஒ இடை வர்த்தகம் % |
|---|---|---|---|---|---|---|---|
| வங்காளதேசம் | 115.2 | 23,787 | 7.1 | 215 | 2,263 | 3,968 | 8.6 |
| பூத்தான் | 1.6 | 227 | 0.1 | 129 | வி.கி. | வி.கி. | - |
| இந்தியா | 901.5 | 250,593 | 75.3 | 274 | 20,934 | 22,131 | 2.0 |
| மாலைத்தீவுகள் | 0.2 | 152 | 0.0 | 633 | 35 | 185 | 16.4 |
| நேபாளம் | 20.8 | 3,481 | 1.0 | 167 | 385 | 868 | 8.3 |
| பாக்கித்தான் | 122.8 | 44,553 | 13.4 | 367 | 6,235 | 8,803 | 1.6 |
| இலங்கை | 17.6 | 10,804 | 3.0 | 565 | 2,788 | 3,905 | 6.4 |
| மொத்தம் | 1,179.7 | 332,876 | 100.0 | 280 | 32,638 | 39,860 | 3.2 |

(அ) 1993 க்கான தரவு

மூலங்கள் : பன்னாட்டு நிதித் தரவு ஆண்டிதழ் 1995
வர்த்தக திசை தரவுகள் ஆண்டிதழ் 1995

(வங்காளதேசம்) முதலீடு மற்றும் வர்த்தகம் (நேபாளம்) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (இந்தியா) பணிகள் (இலங்கை) இத்துடன் சுற்றுலா (மாலைதீவுகள்) போன்றவற்றைக்கொண்ட பரந்தளவிலான துறைகளை உள்ளடக்கியிருக்கும்.

1996 மாச்சில் நடைபெறவுள்ள வர்த்தக தாராளமயமாக்கல் மீதான அரசுகளுக்கிடையிலான குழுவின் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் கலந்துரையாடல்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தீர்வையல்லா வழிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்ற மாதிரிகள் சுங்க நடைமுறைகளை இலகுபடுத்தல், பொருந்தச்செய்தல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல், ஓரளவு தீர்வை மற்றும் தீர்வையல்லா கட்டுப்பாடுகளை ஒழித்துவிடுதல் உற்பத்தி பாதுகாப்பு மற்றும் தீர்வை வெட்டுக்களை மேலும் விரிவாக்கல் என்பனபற்றியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரா உறுப்புநாடுகளிடையே வர்த்தக தாராள மயமாக்கல் முன்னேற்றம் கண்டுவருகின்றமையின் காரணமாக சார்க் அமைப்பானது பெரும்பாலும் 2000 ஆம் ஆண்டில் அல்லது மிஞ்சிப்போனால் 2005 ஆம் ஆண்டில் சுதந்திர வர்த்தக பிராந்தியமாக மாறிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தெற்காசிய முன்னுரிமை நாடுகளுக்கிடையில் வர்த்தகம் 3 சதவீதத்திற்கு மட்டுமே வகை கூறுகின்ற வேளையில் (அட்டவணை 3) தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளின் முக்கியத்துவமானது, உறுப்பினர் நாடுகளுக்கிடையில் மட்டுமல்ல உறுப்பினர் அல்லா நாடுகளுக்கிடையிலும் வர்த்தக வாய்ப்புக்களை மேம்படுத்தி விரிவாக்கும் நோக்கில் உறுப்பினர் நாடுகளுக்கிடையே எதிர்பார்க்கப்பட்ட வர்த்தக தாராளமயப்படுத்தலிலேயே தங்கியுள்ளது. இது தொடர்பாக, தெமுஉ நாடுகளுள் தற்போது இலங்கை அதிகூடிய தாராள வர்த்தகக் கொள்கையினை கொண்டுள்ள வேளையில் தெவமுஒவின் கீழ் பிராந்திய ஒத்துழைப்புடன் அனைத்து உறுப்பினர் நாடுகளும் இறுதி உருகுவே சுற்று சீரமைப்பு நடவடிக்கைகளின் குறிக்கோள்களுக்கு இசைந்து செல்லும் வகையில் அனைத்து உறுப்பினர் நாடுகளும் முழுமையாகத் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக முறைக்கு மாறும் என எதிர்பாாக்கப்படுகின்றனர்.

### அட்டவணை 4

தெவமுஒ நாடுகளுடன் இலங்கையின் வர்த்தகம் - 1995
(ஐ. அ. டொலர்களில்)

| நாடு | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் |
|---|---|---|
| வங்காளதேசம் | 12.0 | 5.6 |
| பூத்தான் | - | - |
| இந்தியா | 31.9 | 469.2 |
| மாலைதீவுகள் | 14.3 | 16.8 |
| நேபாளம் | 0.4 | 0.7 |
| பாக்கித்தான் | 43.4 | 52.4 |
| தெமுவஒ பங்குவீதம் | 2.7 | 10.5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## கப்பற் கட்டண வீதங்கள்

கப்பலேற்றும் நிறுவனங்களுக்கிடையேயான அதிகரித்த போட்டியின் காரணமாக 1995 இல் கப்பலேற்றும் பணிகளின் திறமை மேலும் முன்னேற்றம் கண்டது. கப்பல் போக்குவரத்தில் குறைந்த தொழிற்பாட்டுச் செலவுடன் நடத்தப்படுவதாக அறியப்படும் கலமல்லா தொழிற்பாட்டு பொருட்கொண்டு செல்லல் முறையின் தோற்றமானது இவ்வாண்டில் கப்பற் கட்டணங்களில் மேலும் குறைப்பை ஏற்படுத்தியது. ஐக்கிய இராச்சியம், வடகண்டம், எகிப்து, சிரியா போன்ற முக்கிய கடல் மார்க்கங்களை உள்ளடக்குகின்ற கப்பற்படுத்தல் நிறுவனங்கள் அவற்றின் கப்பற் கட்டண முறையை பண்ட அடிப்படையிலான முறையிலிருந்து 1995 இல் அனைத்துவகைக் கப்பற் கட்டண முறைக்குமாற்றியவேளையில் மத்தியதரைக்கடல், சிங்கப்பூர் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கடல் மார்க்கங்களை உள்ளடக்கிய கப்பற்படுத்தல் நிறுவனங்கள் முன்னரே அறிமுகப்படுத்தப்பட்ட அவற்றின் அனைத்து வகை கப்பற் கட்டண முறையைத் தொடர்ந்தன. புதியமுறை மேற்கொள்ளப்படுவதன் காரணமாக ஐக்கிய இராச்சியம், வடகண்டம், என்பனவற்றிற்கான தேயிலை, தேங்காய்த்துருவல், தைக்கப்பட்ட ஆடைகள் என்பனவற்றிற்கான கப்பற் கட்டண வீதங்கள் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறப்பர், இறப்பர் கையுறைகள், செயற்படுகாரீயம், துடைப்பங்கள், தூரிகைகள் என்பனவற்றிற்கான கப்பற் கட்டணங்கள் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மத்தியதரைக்கடல் நாடுகள் மற்றும் பிரான்சிற்கு கப்பற்படுத்தப்பட்ட அனைத்துப் பண்டங்களுக்குமான கப்பற்கட்டணவீதங்கள் ஒவ்வொன்றும் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் சிங்கப்பூருக்கான வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. ஐக்கிய அமெரிக்க நாடுகள், கிழக்கு கனடா, யப்பான் ஆகிய நாடுகளுக்கு ஆடைகள் மற்றும் தேயிலை ஏற்றுமதிகளுக்கு கப்பற்கட்டண வீதங்களும் குறைக்கப்பட்டவேளையில் மத்தியகிழக்கு நாடுகளுக்கான வீதங்கள் மாற்றமின்றியிருந்தன.

## ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது ஏற்றுமதித்துறைக்கு பல இறை, நிதியியல் மற்றும் நிறுவனரீதியான ஊக்குவிப்புக்களைத் தொடர்ந்தும் வழங்கியது. தீர்வைத் தள்ளுபடித் திட்டம், தயாரிப்பிற்காக சுங்கப்பிணையிடும் திட்டம், பொறிகளுக்கான தீர்வையற்ற அகற்றல் திட்டம் என்பன 1995 இலும் தொடர்ந்து தொழிற்பாட்டிலிருந்தன. மரபுவழியற்ற துறைகளிலுள்ள சிறிய அளவு பாரிய அளவு ஏற்றுமதியாளர்களுக்கு நிதி உதவிகளும் 1995 இல் தொடர்ந்து வழங்கப்பட்டன.

மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச்சபையானது ஏற்றுமதி நடைமுறைகள், தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களுடாக சந்தைப்படுத்தல், பொதியிடல் மற்றும் உற்பத்தி என்பனவற்றில் புரிந்துணர்வினை மேம்படுத்தும் பொருட்டு ஏற்றுமதியாளர்களுக்காகப் பல உள்நாட்டு வெளிநாட்டு கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் ஒழுங்குசெய்தமை உட்பட பரந்தளவிலான ஏனைய பணிகளையும் வழங்கியது. 1994 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்றுமதிசார்ந்த சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவும் நிகழ்ச்சித்திட்டம் விரிவாக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் 1995 இலும் தொடர்ந்தது. இதன்படி கைப்பணிப் பொருட்கள், ஆபரணங்கள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் போன்ற உயர்ந்த பெறுமதி கூட்டப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய பல மரபுவழியற்ற உற்பத்தித்துறைகளுக்காக பல செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆடைத்தயாரிப்பாளர்களுக்கும் ஆடைக் கைத்தொழிலுக்கு துணைப்பணிகளை வழங்குவோருக்குமாக ஏற்றுமதி அபிவிருத்திச்சபை 1995 ஒற்றோபரில் கொழும்பில் ‘அப்பரல் 95’ கண்காட்சியை ஏற்பாடு செய்தது.

இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வங்கி உத்தரவாதங்களை வழங்கியும் காப்புறுதித் திட்டங்களை வழங்கியும் ஏற்றுமதியாளர்களுக்குத் தொடர்ந்தும் உதவியது. இவ்வாண்டில் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களினது எண்ணிக்கையும் மதிப்பேற்றமும் 43 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தவேளையில் காப்புறுதிப் பத்திரங்களின் பெறுமதி 71 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் எண்ணிக்கை 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் பெறுமதி 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டுக் கண்காட்சிகளில் தீர்வையின்றி பங்குபற்றுவதனை இயலச் செய்யும் பொருட்டு 1994 இல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்திய அதனது கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் உத்தரவாதங்களை நேரகாலத்துடன் மீட்பதனை ஊக்குவிப்பதற்காக தீர்வைத் தள்ளுபடித்

திட்டமொன்றினையும் அறிமுகப்படுத்தியது. அத்துடன் களஞ்சியப்படுத்திவைக்கும் வர்த்தகர்களுக்கு உதவும்பொருட்டு காப்புறுதி கொள்கைத் திட்டமொன்றும் 1995 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேயிலை சிறு உடமை ஏற்றுமதியாளர்களின் களஞ்சியப்படுத்தல் செலவினை குறைப்பதற்கு உதவுவதற்காக களஞ்சிய உத்தரவாதக் கோட்பாட்டின்கீழ் இரசியாவுடன் இவ்வாண்டில் இலங்கை கூட்டுத் தொழில் முயற்சியில் இறங்கியது. சில ஆண்டுகளுக்கு முன் இழக்கப்பட்ட பாகித்தான் சந்தையை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு பாக்கித்தானுடன் கூட்டுத் தொழில்முயற்சி ஒன்று நிறுவப்பட்டது. பாக்கித்தானுக்குத் தொகை வடிவில் தேயிலை ஏற்றுமதி செய்யப்படவுள்ளதுடன் அது பின்னர் உறைகளிலடைக்கப்பட்டு பாக்கித்தானிலுள்ள 840 விற்பனை நிலையங்களூடாக சந்தைப்படுத்தப்படும்.

### வர்த்தக உறவுகள், வர்த்தகப்படுத்தலுக்கான ஒழுங்குகள் மற்றும் தீர்ப்பனவுக்கான ஒழுங்குகள்

1995 சனவரியில் நிறுவப்பட்ட உலக வர்த்தக அமைப்பில் இலங்கை ஆரம்ப உறுப்பினராகியுள்ளது. உலக வர்த்தக அமைப்பிற்கான அதன் கடப்பாட்டின் கீழ் 2,228 தீர்வை விடயங்களைக் கொண்ட வேளாண்மை உற்பத்திகள் மீதான அனைத்துத் தீர்வைகளையும் 50 சதவீத வீதத்தில் இலங்கை கட்டுப்படுத்தியுள்ளது. கைத்தொழில் உற்பத்திகள் மீதான தீர்வைக்கட்டுப்படுத்தலுக்கான வாய்ப்புக்கள் வேளாண்மைக்குப் பொருந்தத்தக்க அதே மேல் எல்லை வீதங்களுடன் மிகச் சிறியளவிலேயே காணப்பட்டன. பணிகளிலுள்ள வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் கடப்பாடுகள் சுற்றுலாவுக்கும் அதனுடன் தொடர்பான பணிகளுக்கும் மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தன. எனினும் இலங்கையின் தற்போதைய வர்த்தகக் கொள்கையானது உலக வர்த்தக அமைப்பிற்கான அதன் கடப்பாடுகளிலும் பார்க்க கூடியளவிற்கு தாராளமானதாக இருந்தது. குறிப்பாக அதனது 35 சதவீத ஆகக்கூடிய உண்மைத் தீர்வை வீதமானது கட்டுப்படுத்தப்பட்ட 50 சதவீதத்தினைவிட குறைவாக இருந்தவேளையில் பணிகள்துறை ஏற்கனவே வெளிநாட்டுப்போட்டியாளர்களுக்குத் (நிதியியல் பணிகளைப் பொறுத்தவரை மொத்த முதலீட்டின் 49 சதவீதம் வரையிலானவை வெளிநாட்டுப் பங்கேற்பாளர்களுக்கு திறந்துவிடப்பட்டது) திறந்திருந்தன.

அரசாங்கம் மற்றும் ஒப்பந்தத் தரப்பினர்களுடனான ஆலோசனைகளின்படி உலக வர்த்தக அமைப்பு 1995 இல் இலங்கையின் வர்த்தகக் கொள்கை மற்றும் வர்த்தகப் பிரயோகங்களில் முக்கிய ஆய்வொன்றினை மேற்கொண்டது. இந்த முயற்சியின் குறிக்கோள் யாதெனில் வர்த்தக தீர்வை மீதான பொது உடன்படிக்கை/உலக வர்த்தக அமைப்பு ஒழுங்குவிதிகள் வரையறைகள், கடப்பாடுகள் என்பனவற்றிற்கு இசைவாக நடந்து கொள்ளுவதை மேம்படுத்துவதற்கு உதவுவதன் மூலம் பலதரப்பு வர்த்தக முறையின் இலகுவான செயற்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்வதாகும். வர்த்தகக் கொள்கைகளும் நடைமுறைகளும் சரியான திசையில் செல்லுகின்றன என்ற கருத்தையும் கடந்தகால இறக்குமதி பதிலீட்டுக் கொள்கைகளினால் உருவாக்கப்பட்ட திரிபுகளை அகற்றுவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் அடைந்திருக்கிறது என்ற கருத்தையும் வர்த்தகக் கொள்கை மீளாய்வுக்குழு கொண்டிருந்தது. வர்த்தக தாராளமயமாக்கல், ஒழுங்குவிதிகளின் தளர்த்தல், தனியார் மயமாக்கல் போன்ற நடவடிக்கைகள் தொழில்வாய்ப்பு, வளர்ச்சி என்பனவற்றிற்கான சூழ்நிலையினை மேம்படுத்தியுள்ளன என்பதை குழு ஏற்றுக்கொண்டுள்ளதுடன் வரி மற்றும் தீர்வை அமைப்புகளை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் பாராட்டியுள்ளது. தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்தல், பலதரப்பு கடப்பாடுகளை உயர்ந்தமட்டத்தில் ஏற்றுக்கொள்ளல், உலக வர்த்தக அமைப்பின் ஏற்பாடுகளை விரைவாக நடைமுறைப்படுத்துதல் என்பன இலங்கைக்கு மிக முக்கியமான விடயங்களாகும் என்ற முடிவுக்கு குழு வந்துள்ளது.

குழு 77 இன் உறுப்பினர்களான, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே, பிரதேசங்களுக்குள்ளேயான ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதற்கான முதலாவது முக்கிய முன்மொழிவாகிய வர்த்தக முன்னுரிமையின் உலகளாவிய முறையின் இரண்டாவது சுற்றில் இலங்கையும் கலந்து கொண்டது. 16 பங்கேற்கும் நாடுகளுடன் கோரிக்கை நிரல்களையும் சலுகை அமைப்புக்களையும் இலங்கை பரிமாறிக் கொண்டுள்ளது. 1995 இல் இரு கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டதுடன், 1996 ஏப்பிரலில் திட்டமிடப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் பேரவைக்கு மிக முன்னதாக 1996 மாச்சு அளவில் பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் எதிர்பார்க்கப் படுகின்றது.

1995 இல் தொழிற்படத் தொடங்கிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறையின் கீழான அனைத்துத் திட்டங்களினது நன்மைகளையும் இலங்கை தொடர்ந்தும் பெற்றுக்கொண்டது. ஐ. அ. நாடுகள், யப்பான், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய 27 முன்னுரிமை வழங்கும் நாடுகளினால் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறையின் 16 வேறுபட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1995 சனவரியில் நடைமுறைக்கு வந்த, திருத்தப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறையானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பிரயோகிக்கப்படும் தகுதிப்பேற்றுக் கோட்பாட்டுக்கும் , மிகச் சிறியளவில் அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகத்தை ஒழிப்பதில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கும் புதிய பண்புகளை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைகளின் அனைத்து அனுமதிப் பங்குகள் முறைகளினதும் உச்ச எல்லைகள், மற்றும் ஆகக்கூடிய வரையறைகள் என்பனவற்றை அகற்றிவிட்டதுடன் அவற்றைத் தீர்வை அமைப்பிற்குள் கொண்டுவந்தது. ஐரோப்பிய ஒன்றிய திட்டத்தினால் உள்ளடக்கப்பட்ட தயாரிக்கப்பட்ட உற்பத்திகள், புறத்தாக்கத்துக்கு அதிகளவில் உட்பட்டவை, உட்படாதவை ஓரளவு உட்பட்டவை, உட்படாதவை என்ற நான்கு தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. புறத்தாக்கத்துக்கு அதிகளவில் உட்பட்டவை என வகைப்படுத்தப்பட்ட உற்பத்திகள்முக்கியமாக புடவை உற்பத்திகளை உள்ளடக்கியிருந்ததுடன் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தீர்வைச்சலுகைகள் மேலும் குறைக்கப்பட்டன. புதிய ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைத் திட்டத்தின் சில அம்சங்கள் இலங்கை மீது ஏற்படுத்தக்கூடிய சில பாதகமான நிலைமைகள் தொடர்பாக வர்த்தகத் திணைக்களம் எடுத்துக் கூறியுள்ளது.

1997 சனவரிக்கு முன்னர் நடைமுறைக்கு வருவதற்கு இருக்கும் பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கையில் இலங்கை 1995 இல் கைச்சாத்திட்டது. முன்னைய உடன்படிக்கையினைப் போன்றே சந்தைத் தலையீட்டிற்கான ஒரே வழியாகக் கருதப்படும் 550,000 மெற்றிக் தொன் கொண்ட பன்னாட்டு தாங்கிருப்புத் தொழிற்பாடுகளூடாக இயற்கை இறப்பர் விலைகள் நிலைப்படுத்தப் படுகின்றன. இலங்கையின் மொத்த இறப்பர் உற்பத்தியும் உலக சந்தைக்கான அதன் ஏற்றுமதிகளும் உலகச் சந்தை நிலைமைகளில் செலுத்தும் செல்வாக்கு ஒப்பீட்டு ரீதியில் மிகச்சிறிதாக இருந்தபோதும் பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை 111 இல் பங்காளியாக இருப்பது இலங்கைக்கு நன்மை பயக்கும் என்றே கருதப்படுகின்றது.

மிகத்தீவிரமான இருதரப்பு, பலதரப்பு பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 1995 திசெம்பர் 7 ஆம் நாள் நடைமுறைக்கு வந்த தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளில் இலங்கை ஒரு ஆரம்ப உறுப்பினரானது. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் நோக்கம் என்னவெனில் பரசுபர வர்த்தக சலுகைகளினூடாக சார்க் அமைப்பிலுள்ள ஒப்பந்த நாடுகளுக்கிடையே பரசுபர வர்த்தகத்தையும் பொருளாதார ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதும் பேணுவது மேயாகும். சலுகைகளின் திரட்டப்பட்ட தேறிய நிரல்களில் மொத்தமாக உள்ளடக்கப்பட்டுள்ள 226 தீர்வை விடயங்களில் (இந்தியா 106, பாக்கித்தான் 35, இலங்கை 31, மாலைதீவு 17, நேபாளம் 14 வங்காள தேசம் 12, பூட்டான் 11) 31 தீர்வை விடயங்களின் மீது இலங்கை சலுகைகளை வழங்கியுள்ளது.

பாங்கொக் உடன்படிக்கையின் கீழ் வங்காளதேசம், இந்தியா, லாவோஸ், கொறியா குடியரசு போன்ற நாடுகளிடமிருந்து இலங்கை தொடர்ந்தும் முன்னுரிமை வசதிகளைப் பெற்றுவருகின்றது.

இருதரப்பு மட்டத்தில், பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை - மாலைதீவு கூட்டு ஆணைக்குழுவின் நான்காவது கூட்டத்தொடர் 1995 சனவரியில் அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற்றது. ஏனைய விடயங்களுடன் வர்த்தகம், சுற்றுலா ஆகிய துறைகளில் இருநாடுகளுக்குமிடையே அதிகரித்த ஒத்துழைப்புபற்றி கூட்டம் முக்கிய கவனம் செலுத்தியது. மேலும் இலங்கைக்கும் இந்தியாவிற்கு மிடையிலான வர்த்தகம், நிதி, மற்றும் முதலீடு என்பனவற்றின் மீதான துணை ஆணைக்குழு, 1995 பெப்புருவரியில் கொழும்பில் கூடியது. தொடர்பான துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மீளாய்வு செய்யப்பட்டதுடன் வர்த்தகப்பாய்ச்சல் மற்றும் முதலீடுகளுக்கு வசதிகளை வழங்குவது தொடர்பான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. 1995 மாச்சில் சனாதிபதியும், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக, வாணிப மற்றும் உணவு அமைச்சரும் இந்தியாவிற்கும், வங்காள தேசத்திற்கும் பயணம் செய்தவேளையில் இந்தவிடயம் தொடர்பாக மேலும் ஒருபடி கூடுதலாக ஆராயப்பட்டது. இக்கலந்துரையாடல்களின்போது ஏற்றுமதி நலன்களைக் கொண்ட பல உற்பத்திப் பொருட்களின் மீதான தீர்வைச் சலுகைகளை இலங்கை உறுதி செய்து கொண்டது. 1995 இல் இலங்கை, குவைத்

மற்றும் சைபிரஸ் ஆகிய நாடுகளுடனான இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளையும் உறுதிப்படுத்திக்கொண்டது.

மாற்றல் வீதங்களுக்கு சிறப்பு எடுப்பனவு உரிமையினைப் பயன்படுத்தி தேசிய நாணயங்களுக்கூடாக மட்டும் தீர்ப்பனவுகளை மேற்கொள்ளும் முன்னைய ஒழுங்கு முறையானது ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர்களிடையேயான வர்த்தக வளர்ச்சிக்கு தடையாகக் காணப்பட்டமையினால் 1995 இன் பிற்பகுதியில் கொழும்பில் நடத்தப்பட்டதொரு கூட்டத்தில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர்கள், ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழ் ஐ. அ. டொலரை முதன்மையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான தீர்ப்பனவு பொறிமுறை ஒன்றை 1996 சனவரி 1 ஆம் நாளிலிருந்து மேற்கொள்ள இணக்கம் கண்டனர்.

## மூலதனக் கட்டுப்பாடுகள்

1995 இல் மூலதனக் கட்டுப்பாடுகள் முறை மாற்றமின்றியிருந்தன. இலங்கை முதலீட்டுச்சபை இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளுக்குப் பொறுப்பான முக்கிய மேலாண்மைச் சபையாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில் மூலதன வெளிப்பாய்ச்சல்கள் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் 100 சதவீதம் வரையிலான வெளிநாட்டு முதலீடுகள், முதலீடுகளின் பெரும்பாலான வகைகளில் அனுமதிக்கப்பட்டன. குறிப்பிட்டஏனைய வகைகள் 40 சதவீதமான தன்னியக்கமான ஒப்புதல்களைப் பெற்றவேளையில் முதலீட்டுச்சபையினாலும் ஏனைய தொடர்பான மேலாண்மைச் சபைகளினாலும் ஒவ்வொன்றாக ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் அதிகரித்த முதலீடுகள் அனுமதிக்கப்படலாம். முதலீடுகளில் ஒருசில வகைகள் தொடர்ந்தும் இலங்கையர்களுக்கு மட்டும் இருந்தன. படுகடன் மீள் கொடுப்பனவுகளின் வடிவில் மூலதன வெளிப்பாய்ச்சல்கள் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களூடாக கட்டுப்பாடற்றமுறையில் அனுமதிக்கப்படும் வேளையில் 1995 இல் வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களும் விடயங்களின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டன. அதன்படி 1995 இல் சென்னையிலும், கராச்சியிலும் இலங்கை வங்கியின் புதிய கிளைகள் இரண்டினை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இலங்கை வங்கி அதனது வெ. நா. வ. பிரிவினது தொழிற்பாடுகளுக்காக மாறுபடும் வீத பத்திரங்களின் வழங்கலினூடாக ஐ. அ. டொலர் 120 இலட்சத்தினைத் திரட்டியது.

## 9.12. உள்நாட்டு வர்த்தகம்

1995 இல் உள்நாட்டு வர்த்தகக் கொள்கையானது முக்கியமாக நுகர்வோர் பாதுகாப்பினையே நோக்கமாகக் கொண்டிருந்தது. உள்நாட்டு வர்த்தகக் திணைக்களம் (உவதி) வர்த்தகத்தில் காணப்பட்ட துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கும் தரநிர்ணயம் மீதான குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களை நிருவகிப்பதற்குமான தொழிற்பாடுகளை மேற்கொண்டது. உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம், வர்த்தக துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்ட நுகர்வோரது பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் வழிமுறைகள் சம்பந்தமாக தனது பணிகளை விரிவாக்கியது. இதன்படி, இவ்வாண்டில் பெறப்பட்ட 867 முறைப்பாடுகளில் 429 முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்பட்டன. அத்துடன் இத்திணைக்களமானது, வளமாக்கி வர்த்தகத்தில் காணப்பட்ட துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தும் முகமாக வளமாக்கிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் வேளாண்மை அபிவிருத்தி அமைச்சுக்குத் தொடர்ந்தும் உதவியது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்களை நீக்கும் முகமாக 1995 இல் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும், அச்சட்டத்தின்கீழ் புதிய பணிப்புரைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

அளவீட்டுப் பயன்பாட்டினையும், கட்டுப்பாட்டினையும் பொறுத்தளவில் தற்போதுள்ள சட்டவாக்கத்தை வலுப்படுத்தும் வகையில் "தரநிர்ணயமும் பணிகளும்" என்ற சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் இவ்வாண்டில் நிறைவேற்றப் பட்டது. இச்சட்ட மூலமானது பொதுதேகநலம், சுற்றாடல், பாதுகாப்புத்தரம் ஆகியவற்றைப் பேணிக்காப்பதற்காக சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க அளவீட்டுச் சான்றிதழ்களை வழங்குவதற்கான சட்ட அமைப்பொன்றினை உருவாக்கும்.

மேற்பார்வை மற்றும் பரிசீலனை என்பனவற்றின் மூலமாக வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு மேலதிகமாக உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமானது 1995 இல் பொதுமக்களுக்கும், பாடசாலைப் பிள்ளைகளுக்குமான நுகர்வோர் புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றினை நடாத்தியது.


* கூட்டுறவுச் சங்கங்களுக்கான மா விற்பனைகளின் மொத்த விற்பனவு விலை.

நியாய வர்த்தக ஆணைக்குழுவானது (நிவஆ) தனியுரிமை மற்றும் போட்டித்தன்மையற்ற செயல் முறைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல், தற்போது விலைக் கட்டுப்பாட்டிலுள்ள ஓரேயொரு உற்பத்திப் பொருளான மருந்தாக்கல் விடயங்களுக்கான ஆகக் கூடிய சில்லறை விலைகளைத் தீர்மானித்தல் ஆகியவை சம்பந்தமாக தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. அதேவேளையில் அமைச்சரவைப் பணிப்பொன்றினைப் தொடர்ந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பன்னிரண்டினது விலைகள் 1995 திசெம்பரிலிருந்து செயற்படும் வகையில் விலைக்கட்டுப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டன.

சீமெந்து மற்றும் உப்பு வர்த்தகத்திலுள்ள போட்டித்தடுப்பு நடவடிக்கைகளையும், துஷ்பிரயோகங்களைம் ஆகக்குறைந்ததாக்கும் நோக்கில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகளையும் நியாய வர்த்தக ஆணைக்குழு பரிசோதனை செய்தது. அத்துடன், சந்தையில் நியாயமான விலை மட்டங்களைப் பேணும்பொருட்டு கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின்கீழ் சவர்க்காரங்கள், பற்பசை, சஞ்சிகைகள், பால்மா, விசுக்கோத்துக்கள் என்பனவற்றின் விலைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

1995 இல் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் முக்கிய உணவு விடயங்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளையும், மொத்த சில்லறை விற்பனைகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. நாடு முழுவதும் கூ. மொ. வி. நிலையத்தின் உறைகளிலடைக்கப்பட்ட உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனைகளை விரிவாக்கும் பொருட்டு 1995 இல் அங்கீகரிக்கப்பட்ட வணிகர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 1995 திசெம்பர் இறுதியில் 8,892 அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கூ. மொ. வி. நிறுவனம் பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய் என்பனவற்றின் இறக்குமதி மற்றும் விற்பனைகளில் இலாபத்தன்மையைப் பேணியதெனினும் தனியார்துறையிலிருந்து போட்டியை எதிர்நோக்கியமையினால் 1994 இற்கும் 1995 இற்கும் இடையில் அதன் பெரிய வெங்காயத்தின் இறக்குமதிப் பங்கு 27 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் உருளைக்கிழங்கு இறக்குமதி 18 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை செம்பருப்பின் இறக்குமதியில் அதன் பங்கு 35 சதவீதத்திலிருந்து 42 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. 1995 இல் கூ. மொ. விற்பனை

வரைபடம் 9.6
சுற்றுலா புள்ளி விபரங்கள்
(1990 = 100)




நிறுவனம் கோதுமைத்தானியத்தின் ஏக இறக்குமதியாளர் என்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1994 ஓகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மா உதவுதொகையில் படிப்படியான குறைப்புக் காணப்பட்டபோதும், 1995 இறுதியில் உள்நாட்டு கோதுமை மாவிற்பனையில்* உதவுதொகை கி. கிறாமொன்றுக்கு ரூ. 4,95 ஆக இருந்தது.

பண்டக் கொள்வனவுத் திணைக்களம் சிறு உடைமையாளர்களிடமிருந்து தட்டை இறப்பரின் கொள்வனவுத் தொழிற்பாட்டினைத் தொடர்ந்து மேற்கொண்டது. எனினும் திணைக்களம் சிறிய அளவினை மட்டுமே கொள்வனவு செய்தது. திணைக்களம் தட்டை இறப்பருக்கான உற்பத்தியாளர் விலைகளை பன்னாட்டு விலைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் அறிவித்ததனால் இக்கொள்வனவுகள் சிறு உடமையாளர்களினால் இலாபம் மிக்க விலைகளைப் பெற உதவின. அவ்விலைகள் தனிப்பட்ட வணிகர்களின் குறியீட்டு விலைகளாகவும் தொழிற்பட்டன. அத்துடன், திணைக்களம் தட்டை இறப்பர் உற்பத்திக்குத் தேவையான இரசாயனங்களையும் பகிர்ந்தளித்தது.

### 9.13. சுற்றுலா

சுற்றுலாத்துறை ஆண்டின் இறுதியில் மிகப் பெரும் பின்னடைவினைக் கொண்டிருந்தது. 1995 ஏப்பிறலில் பயங்கரவாத நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கிய பின்னரும்கூட 1995 செம்தெம்பர்வரை சுற்றுலா வருகைகள் 5 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், பயங்கரவாத நடவடிக்கைகளின் அதிகரிப்பானது இறுதிக் காலாண்டில் சுற்றுலா வருகைகளில் 17 சதவீத வீழ்ச்சி ஏற்பட வழிவகுத்தது. ஆண்டினை முழுமையாக நோக்குகையில் மொத்த சுற்றுலா வருகைகள் 1 சதவீதத்தினால் வீழ்ச்சிடைந்தன. 1995 இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள்

## அட்டவணை 9.11
## சுற்றுலா புள்ளிவிபரங்கள் 1991 - 1995

| Item | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) | சதவீத மாற்றம் 1994 | சதவீத மாற்றம் 1995 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகள் வருகை | 317,703 | 393,669 | 392,250 | 407,511 | 403,401 | 3.9 | -1.0 |
| 2. பிரதேச ரீதியான வருகைகள் | | | | | | | |
| ஐரோப்பா | 198,413 | 256,485 | 257,883 | 261,045 | 254,730 | 1.2 | -2.4 |
| பிரான்ஸ் | 35,279 | 40,206 | 34,770 | 30,510 | 30,996 | -12.3 | 1.6 |
| ஜேர்மனி | 63,610 | 85,365 | 95,541 | 93,756 | 79,698 | -1.9 | -15.0 |
| இத்தாலி | 23,312 | 25,539 | 18,210 | 18,066 | 18,378 | -0.8 | 1.7 |
| ஐக்கிய இராச்சியம் | 31,585 | 41,238 | 44,226 | 50,313 | 63,582 | 13.8 | 26.4 |
| ஏனையவை | 44,627 | 64,137 | 65,136 | 68,400 | 62,076 | 5.0 | -9.2 |
| வடஅமெரிக்கா | 11,519 | 12,954 | 13,743 | 15,612 | 14,565 | 13.6 | -6.7 |
| கனடா | 3,462 | 4,065 | 4,044 | 4,920 | 5,469 | 21.7 | 11.2 |
| ஐ. அ. நாடுகள் | 8,057 | 8,889 | 9,699 | 10,692 | 9,096 | 10.2 | -14.9 |
| ஆசியா | 92,543 | 107,103 | 105,093 | 116,352 | 118,323 | 10.7 | 1.7 |
| யப்பான் | 21,950 | 28,761 | 20,397 | 19,497 | 18,180 | -4.4 | -6.8 |
| ஞுஇந்தியா | 21,901 | 25,728 | 32,391 | 44,142 | 47,448 | 36.3 | 7.5 |
| பாக்கித்தான் | 10,556 | 11,445 | 12,360 | 10,188 | 11,325 | -17.6 | 11.2 |
| கொங்கொங் | 6,374 | 1,527 | 2,775 | 4,302 | 7,194 | 55.0 | 67.2 |
| ஏனைய | 31,762 | 39,642 | 37,170 | 38,223 | 34,176 | 2.8 | -10.6 |
| அவுத்திரலாசியா | 12,247 | 12,759 | 11,610 | 12,033 | 10,254 | 3.6 | -14.8 |
| அவுஸ்ரேலியா | 11,241 | 10,980 | 10,413 | 9,681 | 9,066 | -7.0 | -6.4 |
| நியூஸ்லாந்து | 943 | 1,131 | 1,077 | 1,323 | 1,104 | 22.8 | -16.6 |
| ஏனைய | 63 | 648 | 120 | 1,029 | 84 | 757.5 | -91.8 |
| ஏனைய பிரதேசங்கள் | 2,981 | 4,368 | 3,921 | 2,469 | 5,529 | -37.0 | 123.9 |
| 3. நோக்க அடிப்படையிலான வருகைகள் | 317,703 | 393,669 | 392,250 | 407,511 | 403,101 | 3.9 | -1.1 |
| களியாட்டம் | 295,781 | 373,198 | 387,151 | 377,537 | 383,570 | -2.5 | 1.6 |
| அலுவல்சார்ந்தவை | 12,073 | 15,353 | 3,923 | 21,340 | 10,772 | 444.0 | -49.5 |
| ஏனைய | 9,849 | 5,118 | 1,177 | 8,634 | 8,759 | 633.6 | 1.4 |
| 4. சுற்றுலா இரவுகள் ('000) | 3,633 | 4,055 | 4,148 | 4,250 | 4,051 | 2.5 | -4.7 |
| 5. இன்பப் பயணிகளின் வருகைகள் | 2,665 | 5,651 | 6,093 | 8,413 | 10,556 | 38.1 | 25.5 |
| 6. மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.ப.கி) | 6,486 | 8,826 | 10,037 | 11,375 | 11,569 | 13.3 | 1.7 |
| 7. தலைக்குரிய சுற்றுப் பயண செலவு (ரூ) | 20,415 | 22,420 | 25,588 | 27,913 | 28,396 | 9.1 | 1.7 |
| 8. மொத்தத் தொழில் நிலை | 64,507 | 69,096 | 73,704 | 84,154 | 87,360 | 14.2 | 3.8 |
| நேரடியாக | 26,878 | 28,790 | 30,710 | 35,064 | 36,260 | 14.2 | 3.4 |
| மறைமுக | 37,629 | 40,306 | 42,994 | 49,090 | 51,100 | 14.2 | 4.1 |

(அ) தற்காலிகம்

மூலங்கள் : சுற்றுலாச்சாலை
இலங்கை வங்கி

ரூபா நியதிகளில் ரூ. 115,690 இலட்சமாக விளங்கி 2 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தவேளையில் சிஎஉ நியதிகளில் 7 சதவீத வீழ்ச்சியைக் கொண்டு விளங்கியது.

வியாபார நோக்கங்களுக்கான வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியானது 1995 இல் தனியார்துறை முதலீட்டில் ஏற்பட்ட வீழச்சியைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. மொத்த வருகைகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் எயர்லங்கா வானூர்தித் தொகுதி விரிவடைந்தமையின் விளைவாக எயர்லங்கா பறப்புக்கள் கொண்டுவந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 3 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

1995 இல் தரமிடப்பட்ட தங்குமிடத் துறையிலுள்ள சுற்றுலா அலுவலகங்களின் எண்ணிக்கை 134 இல் அதே மட்டத்தில் காணப்பட்ட வேளையில் மொத்த அறை இயலளவு 10,868 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. ஆண்டுக்கான தங்கும் வீதத்தில் மீதான தரவுகள் 1994 இன் 56.6 சதவீதத்திலிருந்து 1995 இல் 53.1 சதவீதத்திற்கு வீழ்ச்சிடைந்தமையைக் காட்டியதுடன் சுற்றுலா விடுதிக் கைத்தொழிலின் இலாபத்தன்மை குறைவடைந்தமை யையும் காட்டியது.

அதேவேளை கடந்த சில ஆண்டுகளில் சுற்றுலா வருகைகள் மற்றும் அதனுடன் இணைந்த பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்த மையைத் தொடர்ந்து சுற்றுலா விடுதிக் கைத்தொழில்போன்ற தொடர்புபட்ட துறைகளில் 1994 இல் தொடங்கிய முதலீட்டுச் செயற்றிட்டங்கள் 1995 இலும் தொடர்ந்தன.